A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.

-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 34 / 2024**

திரு.எஸ்.பழனிவேல்,
எண்.1/206, திருவள்ளுவர் தெரு,
மேல் வளையமாதேவி அஞ்சல் ,
புவனகிரி வட்டம், கடலூர் மாவட்டம்.

………மேல்முறையீட்டாளர்
(திரு.எஸ்.பழனிவேல் &
பிரதிநிதி திரு R. சோமசுந்தரம்)

எதிர்

1. செயற்பொறியாளர் / இ& ப/ சிதம்பரம்,
110/33-11கேவி சிதம்பரம் துணை மின்நிலையம்,
ஆண்டிஸ்வரன் கோவில் தெரு அருகில்,
கடலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சிதம்பரம் – 608001.

2. உதவி பொறியாளர் / இ&ப/ கிழக்கு /சேத்தியாதோப்பு
கடலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பெரியார் நகர், மேல்வலயமாதேவி அஞ்சல்,
புவனகிரி தாலுக்கா, சேத்தியாதோப்பு – 608704.

. . . எதிர்மனுதாரர்கள்
(திருமதி R. ஜெயந்தி, செயற்பொறியாளர் / இ& ப/ சிதம்பரம்
திரு R. ரங்கநாதன், உதவி பொறியாளர் / இ&ப/ கிழக்கு /சேத்தியாதோப்பு)

**மனு பெறப்பட்ட நாள்: 07-05-2024**

**கேட்புரை நாள்: 26-06-2024**

**ஆணை நாள்: 10-07-2024**

07.05.2024 அன்று பெறப்பட்ட திரு.எஸ்.பழனிவேல், எண்.1/206, திருவள்ளுவர் தெரு, மேல் வளையமாதேவி அஞ்சல் , புவனகிரி வட்டம், கடலூர் மாவட்டம் அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 34/2024 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட

மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 26.06.2024 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

**1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

விவசாய மின் இணைப்பு எண்.02–059–002–653 இடமாற்றம் செய்யுமாறும், தனது ஜீவாதாரம் பாதிக்கப்பட்டதற்கு உண்டான உரிய நஷ்டஈடு வழங்குமாறும் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

**2.0 வழக்கின் சுருக்கம்:**

2.1 தனது விவசாய மின் இணைப்பு எண்.02–059–002–653 உள்ள இடமான வளையமாதேவி–மேல்பாதி சர்வே எண் 48/15A–இல் உள்ள நிலத்தை NLC நிர்வாகத்தால் கையகப்படுத்தப்பட்டதால் விவசாய இணைப்பை இடமாற்றம் செய்து தரக் கோரி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேல்முறையீட்டாளரின் விண்ணப்பத்தின் அடிப்படையில் விவசாய மின் இணைப்பு எண்653–ஐ இடமாற்றம் செய்ய அனுமதி பெறப்பட்டவுடன் பங்களிப்பு திட்டத்தின் கீழ் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு விண்ணப்பதாரரால் மதிப்பீட்டுக் கட்டணம் செலுத்தும் பட்சத்தில் விவசாய மின் இணைப்பு இடமாற்றம் செய்யப்படும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எதிர்மனுதாரரின் பதில் திருப்தி அளிக்காத காரணத்தால் மேல்முறையீட்டாளர் கடலூர் மின் பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 27.02.2024 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், கடலூர் மின் பகிர்மான வட்டம் 25.03.2024 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில்

அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>

3.1 கடலூர் மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 25.03.2024 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*

*கேட்புரை நாளில் மனுதாரரின் வாதம் மற்றும் எதிர் மனுதாரர்கள் எடுத்துரைத்த வாதங்கள், மனுதாரர் அளித்த மனு மற்றும் எதிருரைகள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து பார்க்கும் போது கீழ்கண்டவை இவ்வழக்கிற்கான வினாவாக எழுகிறது.*

*1. மனுதாரர் குறிப்பிடும் விவசாய மின் இணைப்பு எண் 059-002-653 இடமாற்றம் செய்து தர எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிட இயலுமா?*

*2. வேறு பரிகாரங்கள் பெற மனுதாரர் தகுதியானவரா?*

*வழக்கெழு வினா -1*

*மனுதாரர் குறிப்பிடும் விவசாய மின் இணைப்பு எண் 059-002-653 இடமாற்றம் செய்து தர எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிட இயலுமா?*

*எதிர் மனுதாரர்களின் எதிருரையில் கூறியுள்ளவாறு மனுதாரரின் கோரிக்கையான விவசாய மின் இணைப்பு எண் 059-002-653-ஐ இடமாற்றம் செய்வதற்கு உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கும் பட்சத்தில் TNERC Notification dated 05-August-2020, Notification No. TNERC/DC/8-27/dated 16.07.2020- அறிவுறுத்தியுள்ளவாறு பங்களிப்பு திட்டத்தின் கீழ் மனுதாரரால் மதிப்பீட்டு கட்டணம் செலுத்தும்பட்சத்தில் இம்மின்னிணைப்பு இடமாற்றம் செய்ய உடன் நடவடிக்கை எடுக்க இம்மன்றம் உத்தரவிடுகிறது.*

*மேலும் மனுதாரர் மன்றத்திற்கு அளித்த மனுவில் பிரிவு அலுவலக பணியாளர் மீது புகார் தெரிவித்துள்ளார் கேட்புரை நாளிலும் பிரிவு அலுவலக பணியாளர் மீதான தனது குற்றசாட்டை தெரிவித்தார். மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்திற்கான விதி 2(f) ன்படி இப்புகார் மனு மீது மன்றத்தினால் நடவடிக்கை எடுக்க இயலாது என இம்மன்றம் கருதுகிறது.*

***<u>வழக்கெழு வினா-2</u>***

*வேறு பரிகாரங்கள் பெற மனுதாரர் தகுதியானவரா?*

*மேற்கண்ட வழக்கெழு வினா-1 மனுதாரருக்கு எதிராக முடிவு கண்டுள்ள நிலையில் வேறு எந்த பரிகாரமும் மனுதாரருக்கு கிடைக்க கூடியதில்லை என்று இம்மன்றம் முடிவு செய்கிறது. செலவுதொகை எதுவும் இல்லை."*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 26.06.2024 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு.எஸ்.பழினிவேல் மற்றும் அவருடைய பிரதிநிதி திரு R. சோமசுந்தரம் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.3 எதிர்மனுதாரர்கள் திருமதி R. ஜெயந்தி, செயற்பொறியாளர் / இ& ப/ சிதம்பரம் மற்றும் திரு R. ரங்கநாதன், உதவி பொறியாளர் / இ&ப/ கிழக்கு /சேத்தியாதோப்பு, கடலூர் மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் கடலூர் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் தொடுத்துள்ள வழக்கு தொடர்பாக முறையாக விசாரணை செய்யாமல் ஒருதலைபட்சமாக வழங்கியுள்ள தீர்ப்பு ஏற்றுக் கொள்ளும்படியாக இல்லை எனவும், 03.11.2023 அன்று உதவி மின் பொறியாளர் /இகா/ கிழக்கு/ சேத்தியார்தோப்பு அவர்களிடம் தனது விசாரணை மின் இணைப்பு எண் 059-002-653 உள்ள இடம் NLC India Limited ஆல் கையகப்படுத்திய காரணத்தினால் தனக்கு சொந்தமான வேறு நிலம் சர்வே எண் 231/எல் மாற்றம் செய்ய வேண்டி அளித்த விண்ணப்பத்தின் பேரில் எந்த நடவடிக்கையும் எடுக்கபடவில்லை என்றும் CA அவர்கள் ரூ.10,000/- கையூட்டு கேட்டது குறித்த

தீர்ப்பில் ஏதும் சொல்லாமல் கழக ஊழியர்களை காப்பாற்றும் நோக்கில் செயல்படுவதாகவும், தனது மனு தொடர்பாக கையூட்டு ரூ. 10.000/− கேட்டு CA அவர்கள் பொறியாளர் கையொப்பம் இட்ட தனது மனுவினை விதிமீறி தன்னிடமே 26.12.2023 அன்று திரும்பி கொடுத்து இணைய தளம் மூலம் பதிவு செய்ய கேட்டது விதி மீறல் பற்றியும் காலதாமதம் பற்றியும் ஏதும் நடவடிக்கை இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

5.2 இரண்டுமுறை மேற்பார்வை பொறியாளர் நுகர்வோர் குறைதீர்க்கும் கூட்டம் சிதம்பரத்தில் தான் அளித்த மனுவின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் நுகர்வோர் குறைதீர்க்கும் கூட்டத்தின் மனுக்கு வாரிய செயல் முறையான ஒப்புகை அட்டை கொடுக்கப்படவில்லை எனவும், இத்தகைய மனு மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையை 1 மாதத்திற்குள் தெரிவிக்க வேண்டியது 3 மாதங்கள் கடந்தும் தெரிவிக்கப்படவில்லை எனவும், பிரிவு அலுவலகத்தில் தனது விண்ணப்பத்தை தான் கையூட்டு கொடுக்கவில்லை என்ற காரணத்தினால் திரும்ப அளித்துவிட்டு இரண்டு மாதம் கடந்து இணையதளத்தில் பதிவு செய்யுமாறு கூறியுள்ளதாகவும், இதனால் தேவையில்லாத கால விரயம் மின் கழகத்தால் ஏற்பட்டுள்ளதாகவும், இது குறித்து தீர்ப்பில் ஏதும் குறிப்பிடவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 06.01.2024 அன்ற இணைய தளத்தில் காலம் கடந்து பதிவு செய்ய வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் தனது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது குறித்து ஏதும் தீர்ப்பில் இல்லை எனவும், தான் விண்ணப்பம் செய்த உடன் இடத்தை ஆய்வு செய்து எந்த குறையும் சொல்லாமல் இருந்துவிட்டு மின் நுகர்வோர் குறைதீர்வு மன்றத்தில் வழக்கு தொடுத்தவுடன் ஏதும் ஆராயாமல் நிலம் திரு. சம்பந்தம் பெயரில் உள்ளதாக தரப்பில் கூறியது ஏற்றுக் கொள்ளும்படியாக இல்லை எனவும் வருவாய் ஆவணங்களை அலுவலகத்தில் சரியாக ஆய்வு செய்யவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 தீர்ப்பில் கூறியுள்ள குறைகள் தொடர்பாக தன்னிடம் எழுத்து பூர்வமாகவோ கடிதத்திலோ ஏதும் தெரிவிக்கவில்லை என்றும், இது தொடர்பாக பின்பு தேதியிட்ட பதிவு அஞ்சல் மூலம் தெரிவித்துள்ளதாகவும், விவசாய மின் இணைப்பு கொடுக்கும் அதிகாரம் மின் வாரியத்திற்கு மட்டுமே உள்ளது என்றும், வேறு கம்பத்தில் மாற்ற அதிகாரமும் அவர்களிடமே உள்ள நிலையில் விவசாயிகளுக்கு எப்படி தெரியும் என்றும், வேறு

கம்பத்தில் மின் இணைப்பு மாற்றப்பட்டது என்பது இது குறித்து எந்த தகவலும் தனக்கு தெரியாது எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையம் FMB, வரைபடம், ரசீது தேவையில்லை என்று ஆணை வெளியிட்டுள்ள நிலையில் பிரிவு அலுவலகத்தில் வேண்டுமென்றே அலைகழைக்கும் நோக்கில் தேவையில்லாத ஆவணங்களை கேட்டு அலைகழிப்பது கையூட்டு பெறும் நோக்கம் இல்லை என்று தன்னால் எவ்வாறு ஏற்றுக் கொள்ள இயலும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 தான் மின்சார ஒழுங்குமுறை ஆணையம் வெளியிட்டதன் அடிப்படையில் விண்ணப்பம் அளித்து இன்று வரைவில் தனது விண்ணப்பம் மீது எந்த நடவடிக்கையும் எடுத்ததாக தெரியவில்லை என்றும், எனவே தனது விவசாய மின் இணைப்பு இடமாற்ற ஆணையை விரைந்து வழங்க ஆணையிட வேண்டுமென மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 NLC India Limited நிர்வாகம் தனது விவசாய நிலத்தை ஆர்ஜிதம் செய்த பிறகும் தனக்கு வேறு வேலைகள் தெரியாத நிலையில் தனது குடும்ப ஜீவனத்திற்காக வேறு விவசாய நிலத்தை விலைக்கு வாங்கி விவசாயம் செய்ய முற்படும்போது மின் இணைப்பு கிடைக்காத நிலையில் தனது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே உடனடியாக மின் இணைப்பு இடமாற்றம் வழங்கிட ஆணையிடவும், தனது ஜீவாதாரம் பாதிக்கப்பட்டதற்கு உண்டான உரிய நஷ்டயீடு வழங்குமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் சிதம்பரம் கோட்டம் கிழக்கு சேத்தியாதோப்பு பிரிவுக்கு உரிய விவசாய மின் இணைப்பு எண்02–059–002– 653 என்ற மின் இணைப்பை இடமாற்றம் செய்து தரக்கோரி மின் இணைப்பின் நுகர்வோர் திரு.S.பழனிவேல் S/O சம்பந்தம், மேல் வளையமாதேவி கிராமம் அவர்கள் 03.11.2023 அன்று பிரிவு அலுவலகத்தில் நேரடியாக விண்ணப்பம் அளித்ததாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய 20.07.2020 தேதியிட்டு வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட Supply Code Regulation 5 (6) – இடமாற்றம் கோரும் விவசாய மின் இணைப்பின் நுகர்வோர் தற்போது விவசாய மின் இணைப்பு உள்ள இடம் மற்றும் இடமாற்றம் கோரும் இடம் ஆகிய இரண்டு இடத்திற்கும் தாமே சொந்தக்காரர் என்பதற்கு சார்பான ஆவணங்களை விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க கூறியுள்ளதாகவும், அதன் அடிப்படையில் அவர் சமர்ப்பித்த ஆவணங்களை ஆய்வு செய்ததில் தற்போது மின் இணைப்பு உள்ள இடம் மேல்வளையமாதேவி கிராம புல எண்.51/IA என்றும் மின் இடமாற்றம் கோரும் இடம் கீழ்வளையமாதேவி கிராம புல எண் 231/IE என்றும் தெரிவித்திருந்ததாகவும், அதற்குரிய கிராம நிர்வாக அலுவலர் சான்று மற்றும் நில உடமை ஆவணங்களையும் இணைத்திருந்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 விண்ணப்பத்துடன், உரிய பிரிவு அலுவலரால் விவசாய மின் இணைப்பு தற்போது இயக்கத்தில் உள்ள இடம் ஆய்வு செய்யப்பட்டதில் இவ்விடம் NLC நிறுவனத்தால் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது உறுதிசெய்யப்பட்டதாகவும், எனவே அதற்குரிய ஆவணத்தை அளிக்க கோரப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மேலும் அவர் இணைத்திருந்த VAO சான்றிதழில் மேற்குறிப்பிட்ட புல எண் 51/IA –ல் உள்ள மின் மோட்டாருக்கு மின் இணைப்பு 48/15A என்ற புல எண்ணில் உள்ளது என்று தெரிவித்து 48/15A–ல் பழுதடைந்த போர் இருந்துள்ளது என்று தெரிவித்துள்ளதாகவும், இதனையடுத்து கூடுதலான ஆவணங்களை ஆய்வு செய்ததில் மேற்கண்ட மின் இணைப்பு முதன் முதலாக வழங்கப்பட்ட காலத்தில் 03–05–2006–ல் திரு சம்பந்தம் என்பவர் பெயரில் இருந்து அவர் இறந்துவிட்ட காரணத்தால் அவரது மகன் திரு S.பழனிவேல் என்பவருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டிருப்பதும் அந்த ஆணையில் புல எண் 48/15A என்று உள்ளதை அறியப்பட்டதால், இம்மின் இணைப்பு புல எண் 48/15A– ல் தான் வழங்கப்பட்டுள்ளது என்று உறுதி செய்யப்பட்டதாகவும், அங்கு ஆழ்துளை கிணறு பழுதானதால் நுகர்வோர் மின்வாரியத்திடம் எந்த முறையான அனுமதியும் பெறாமல் புல எண் 51/IA–ல் போர் அமைத்து மின் இணைப்பு வழங்கப்பட்ட கம்பத்தில் அல்லாது அருகில் உள்ள வேறு ஒரு மின்கம்பத்தில் தன்னிச்சையாக மின் இணைப்பு செய்து மின் உபயோகம் செய்து வருவது கண்டறியப்பட்டதாகவும், எனவே அவர் பழைய பழுதான போர் இருந்த இடம் சர்வே எண் 48/15 A என்பதற்கு பதில் 51/IA

என்று தவறாக விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருந்தது உறுதி செய்யப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மேலும் தற்போது விவசாய மின் இணைப்பு 02–059–002–653–ஐ இடமாற்றம் செய்ய அளிக்கப்பட்ட விண்ணப்பத்தில் இணைக்கப்பட்டுள்ள பட்டாவில் சர்வே எண்.48/15A–ல் 46ஏர்ஸ் நிலப்பரப்பு தற்போது திரு சம்பந்தம் பெயரிலேயே உள்ளதாகவும், பின்னர் பாகப்பிரிவினை செய்யப்பட்டதாக நுகர்வோர் அளித்த பத்திரத்தில் மேற்கண்ட சர்வே எண்48/15A–ல் நுகர்வோருக்கு 12.5 ஏர்ஸ் நிலம் மட்டுமே சொந்தம் என்று பதிவாகியுள்ளதாகவும், சர்வே எண்48/15A–ல் நுகர்வோருக்கு உட்பிரிவு செய்யப்பட்டது குறித்து FM (நிலவரைபடம்) நகலில் விபரம் ஏதும் இல்லை என்றும், எனவே மேற்குறிப்பிட்ட விவசாய இணைப்பு எண்.02–059–002–653 தற்போது இந்த சர்வே எண்ணில் எங்கு உள்ளது என்ற விபரம் நகலில் இல்லை, எனினும் இவ்விடம் முழுவதுமாக NLC–யால் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு விட்டபடியால் NLC நில ஆர்ஜிதம் செய்தபின் வழங்கப்பட்ட ஆவணங்களை இணைத்து, தற்போது அளிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மற்றும் அனைத்து ஆவணங்களிலும் கிணறு உள்ள புல எண் 51/1A என்பதை மின்வாரிய ஆவணங்களில் உள்ளவாறு 48/15A என்று திருத்தி இணைய வழியாக விண்ணப்பிக்குமாறு கூறி முன்பு அலுவலகத்தில் அவர் நேரடியாக வெள்ளைத் தாளில் அளித்த விண்ணப்பத்தில் பிரிவு அலுவலர் செய்திருந்த சுருக்கொப்பதை அழித்து பிரிவு அலுவலர் ஒப்புதலுடன் வணிக ஆய்வாளரால் நுகர்வோரிடம் அளிக்கப்பட்டதாகவும், விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்து தரும்படி கோரப்பட்டதே தவிர நுகர்வோரிடம் கையூட்டு ஏதும் கேட்கவில்லை என்று உதவி செயற்பொறியாளர் மூலம் வணிக ஆய்வாளருக்கு கோரப்பட்ட விளக்கத்திற்கு வணிக ஆய்வாளர் பதிலளித்துள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 வணிக ஆய்வாளர் மீது நடவடிக்கை கோரி மாவட்டம் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் நுகர்வோரால் கோரப்பட்டதற்கு, இது மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்திற்கான விதி எண் 2(F)ன்படி இம்மன்றத்தால் நடவடிக்கை எடுக்க இயலாது எனவும் புகார் குறித்து குறிப்பிட்டு தனி மனுவாக அளிக்கும் பட்சத்தில் அலுவலக ரீதியான உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும்,

மேலும் அவ்வாறான தனி மனு நுகர்வோரிடம் இருந்து பெறப்படவில்லை என்றும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 இதனையடுத்து கடந்த 06.01.2024 அன்று நுகர்வோர் மேற்கண்ட விவசாய மின் இணைப்பு இடமாற்றத்திற்காக இணைய வழியாக பதிவு செய்யப்பட்ட 200020590 1248 என்ற எண் கொண்ட விண்ணப்பத்தை ஆய்வு செய்ததில் முன்னர் அலுவலகத்தில் நேரடியாக அளித்த விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ளதை போலவே இணைய வழி விண்ணப்பத்திலும் பழைய போர் இருக்கும் இடம் மேல்வளையமாதேவி புல எண்51/IA என்று தவறாக அனைத்து ஆவணங்களையும் பதிவு செய்திருந்தார் என்றும், மேலும் NLC நில ஆர்ஜிதம் செய்த ஆவணம் ஏதும் பதிவேற்றம் செய்யப்படவில்லை என்றும் இது குறித்து பிரிவு அலுவலரால் நுகர்வோரிடம் தெரிவிக்கப்பட்டதில் 12.02.2024 அன்று சரியான எண்48/15A குறிப்பிட்டு சான்றுகளை அலுவலகத்தில் சமர்ப்பித்ததாகவும். NLC –ன் நில ஆர்ஜிதம் சம்பந்தப்பட்ட ஆவணத்தை பிரிவு அலுவலகத்தில் 02–03–2024 அன்று அளித்தார் தற்போது உள்ள சரியான ஆவணங்களைக் கொண்டு 07–03–2024 அன்று இணைய வழியாக 20002059032460 என்ற எண்ணாக விண்ணப்பித்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 தற்போது மின் இணைப்பு உள்ள இடத்திற்கான பட்டா தன் பெயரில் மாற்ற இயலாததன் காரணம், அந்த இடம் NLC–யால் நில ஆர்ஜிதம் 2005 காலத்திலேயே தொடங்கப்பட்டதால் பட்டா மாற்றம் செய்ய இயலவில்லை என்று 20.03.2024 ல் நுகர்வோர் விளக்க கடிதம் அளித்ததாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.9 தற்போது மின் இணைப்பு இடமாற்றம் செய்ய கோரும் கீழ் வளையமாதேவி கிராமத்தில் நுகர்வோருக்கு சொந்தமான புல எண். 231/1E க்கு அருகில் உள்ள 100KVA/11KV எரும்பூர் 12 என்ற மின்மாற்றியில் ஏற்கனவே அதிக மின்பளு மற்றும் தாழ்வழுத்த மின்பாதையின் கடைகோடி நெறிகட்டுப்பாடு அதிகம் உள்ளதால் இடமாற்றம் கோரப்படும் மின் இணைப்பை மின்மாற்றியில் சேர்க்க இயலாத நிலை உருவானதால், புதியதாக ஒரு 63KVA/11KV மின்மாற்றியை மேம்பாடு திட்டத்தில் அமைத்து அதில் இம் மின்இணைப்பை இணைக்கும் வகையில் மதிப்பீடு ரூ.5,78,645/– செலவில் தயார்

செய்யப்பட்டு 25.03.2024 அன்று அனுமதி பெறப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.10 இந்த புதிய மின்மாற்றியில் மின் இணைப்பை இணைக்கும் வகையில் விவசாய மின் இணைப்பு இடமாற்ற கருத்துரு 27.03.2024 அன்று சமர்ப்பிக்கப்பட்டு, NLC என்ற பொதுத்துறை நிறுவனத்தால் நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட இடம் என்பதால் 30.04.2024 அன்று மேற்பார்வை பொறியாளர் / கடலூர் அவர்களால் தலைமை பொறியாளர் விழுப்புரம் மண்டலம் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு, 16.05.2024 அன்று தலைமை பொறியாளர்/ விழுப்புரம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.11 பின்னர் மேற்கண்ட 02–059–002–653 என்ற விவசாய மின் இணைப்புக்கு உண்டான இடமாற்றம் மதிப்பீடு மேற்கண்ட அனுமதி பெறப்பட்ட கருத்துரு அடிப்படையில் தயார் செய்யப்பட்டு 22.05.2024 அன்று அனுமதி அளிக்கப்பட்டதாகவும், தாழ்வழுத்த மின் பாதைக்கான நீட்டிப்பு வகையில் DCW அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட இம்மதிப்பீட்டில் நுகர்வோர் செலுத்த வேண்டிய கட்டணம் ரூ.49,470/– ஆகும் என்றும் இதற்குரிய கேட்பு அறிவிக்கை நுகர்வோருக்கு அளிக்கப்பபட்டு இத்தகைய 28.05.2024 அன்று இணைய வழியாக செலுத்தி விட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.12 மேற்கண்ட அனைத்து நிலைகளிலும் தமிழ்நாடு மின்வாரிய விதிகளுக்கு உட்பட்டு சரியாகவும் துரிதமாகவும் பணி செய்யப்பட்டுள்ளதாகவும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய 20.07.2020 தேதியிட்டு வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட Supply Code Regulation 5 (6) விதியில் "Shifting of an existing service connection, other than an agricultural service connection, involving change in door number or sub door number or SF number, shall be considered as a new connection only" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே புதிய விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்ப நடைமுறைகளும் பழைய விவசாய மின் இணைப்பு இடமாற்றம் கோரும் விண்ணப்ப நடைமுறைகளும் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் நிலையில் அளிக்கப்பட வேண்டிய ஆவணங்களும் மாறுபடும் என்றும், இடமாற்றம் கோரும் நிலையில் ஆவணங்களும், புதிய குழாய்

கிணறும் சரியாக உள்ள நிலையில் இடம் மாற்றம் உடனே செய்யப்படும் எனவே பழைய இடம் மற்றும் புதிய இடம் குறித்து தற்போதைய நில உரிமை ஆவணங்களும் போர் அமைந்துள்ள இடம் குறித்து சரியாக கனித்து அவ்விடத்தில் மின்கம்பம் அமைத்து இணைப்பை வழங்க FM நகல் மற்றும் VAO சான்று தேவை என்று தெரிவித்துக் கொள்ளப்படுவதாகவும், அதன் அடிப்படையில் ஆவணங்கள் கோரப்பட்டதே தவிர நுகர்வோரை அலைக்கழிக்கும் எண்ணத்தில் அல்ல எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.13 மின் குறை தீர்ப்பாயத்தில் நுகர்வோர் தெரிவித்துள்ளது போல் எந்த நடவடிக்கையும் விண்ணபத்தின் மீது எடுக்கப்படவில்லை என்பது தவறான ஒன்றாகும் எனவும், மேற்கண்ட அனைத்து நடவடிக்கைகளையும் பிரிவு அலுவலரால் நுகர்வோருக்கு அவ்வப்போது தெரிவிக்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.14 மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகையான ரூ49,470–ஐ 28.05.2024 அன்று நுகர்வோர் செலுத்திய பின் நுகர்வோருடன் இணைந்து புதிய போர் கிணறு பிரிவு அலுவலரால் கள ஆய்வு செய்யப்பட்டதாகவும், 12.5 HP மின் மோட்டார் திறனுடன் இடமாற்றம் கோரும் புதிய போர் கிணறு வெறும் 19.5 அடி ஆழத்தில் 4 Inch pipe உடன் மட்டுமே உள்ளதும், உரிய போர் கிணறு இல்லாததும் உறுதிசெய்யப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.15 இதனையடுத்து TNERC Amendment to Tamilnadu Electricity Supply code Notification no. TNERC/SC/7.43 dated 16.07.2020 / 20.07.2020 – ன் படி Supply code regulation 5(6) for clause 3(vii)–ல் தெரிவித்துள்ளபடி விண்ணப்பதாரர் இடமாற்றம் மதிப்பீட்டு கட்டணம் செலுத்திய உடன் புதிய இடத்தில் Motor pumpset நிறுவி, TNERC Distribution code– ல் தெரிவித்துள்ள Form 6–ன் படி ஒப்பந்த பத்திரம் அளித்து, மின் இணைப்பு பெற்றுக் கொள்ள தயார் நிலையை தெரிவிக்க பிரிவு அலுவலகம் மூலம் நுகர்வோருக்கு 29.05.2024 அன்று அறிவிக்கை அளிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.16 அவ்வாறு அவர் தயார் நிலையை தெரிவித்தபின் மேற்கண்ட மின் பாதை நீட்டிப்பு அனுமதியின் படி பணி முடிக்கப்பட்டு மின்சாரம் வழங்கப்படும் எனவும், மேலும் தமிழ்நாடு மின் குறைதீர்க்கும் மன்றத்தின் ஆணைப்படி திரு. பழனிவேல் அவர்களின்

மேல்முறையீட்டு மனு தொடர்பாக இசைவிணக்கம் காணும் பொருட்டு செயற்பொறியாளர்/இயக்குதலும் பராமரித்தலும் / சிதம்பரம் அலுவலகத்திற்கு 28.05.2024 (செவ்வாய்க் கிழமை) அன்று காலை 11.00 மணிக்கு நேரில் வரும்படி திரு.பழனிவேல் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.17 அதை தொடர்ந்து திரு.பழனிமேல் அவரது மகன் மற்றும் திரு.சோமசுந்தரம் ஆகியோர் செயற்பொறியாளர்/ இயக்குதலும் பராமரித்தலும் / சிதம்பரம் அலுவலகத்திற்கு 28.05.2024 (செவ்வாய்க் கிழமை) அன்று 11,00 மணிக்கு நேரில் வந்தபோது பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாகவும், அப்போது திரு.பழனிவேல் அவர்களின் விவசாய மின்இணைப்பை இடம் மாற்றம் செய்வதற்கான விண்ணப்பம் பெறப்பட்டது முதல் தற்போது வரை வாரியத்தால் அவரது விண்ணப்பத்தின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி தெரிவிக்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.18 எனினும் அவர் கிழக்கு சேத்தியாதோப்பு பிரிவில் பணிபுரியும் வணிக ஆய்வாளர் அவர்கள் AE அவர்கள் கையெழுத்திட்ட விண்ணப்பத்தை கையூட்டு பெறும் நோக்கில் கையெழுத்தை அடித்துவிட்டு விண்ணப்பத்தை திரும்ப அளித்து விட்டதாக வாதிட்டதாகவும், மேற்படி விண்ணப்பத்தில் உள்ள குறைபாடுகளை சரிசெய்து தருவதற்காகத்தான் விண்ணப்பத்தை திரும்ப அளிக்கப்பட்டது என எடுத்துக் கூறியும் அதனை ஏற்க மறுத்து அலுவலகத்திலிருந்து வெளியே சென்று விட்டதாகவும், இதனால் 28.05.2024 (செவ்வாய்க்கிழமை) நடைபெற்ற பேச்சு வார்த்தையில் இசைவிணக்கம் ஏற்படவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.19 திரு.பழனிவேல் அவர்கள் தயார் நிலை தெரிவித்த பின் மின்பாதை நீட்டிப்பு பணிகள் முடிக்கப்பெற்று விவசாய மின்இணைப்பு எண்.02-059-002-653 இடம் மாற்றம் செய்யப்படும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் தனது விவசாய மின் இணைப்பு எண்.02-059-002-653 உள்ள இடமான வளையமாதேவி-மேல்பாதி சர்வே எண் 48/15A-இல் உள்ள நிலத்தை NLC நிர்வாகத்தால் கையகப்படுத்தப்பட்டதால் அந்த விவசாய மின் இணைப்பை தனக்கு சொந்தமான வேறு நிலம் உள்ள சர்வே எண் 231/1E-க்கு இடமாற்றம் செய்து தரக் கோரி சேத்தியாதோப்பு பிரிவு அலுவலகத்தில் விண்ணப்பித்ததாகவும், ஆனால் அந்த விண்ணப்பத்தின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் திருப்பி அளிக்கப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 இரண்டு மாதங்கள் கடந்து இணையதளத்தில் பதிவு செய்யுமாறு திருப்பி அளிக்கப்பட்டதன் பேரில் 06.01.2024 அன்று இணையதளத்தில் காலம் கடந்த பதிவு செய்ய வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டதாகவும், அதனால் தனது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டதாகவும், தான் விண்ணப்பம் செய்தவுடன் இடத்தை ஆய்வு செய்து எந்த குறையும் சொல்லாமல் இருந்துவிட்டு மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் வழக்கு தொடுத்தவுடன் ஏதும் ஆராயாமல் நிலம் திரு. சம்பந்தம் பெயரில் உள்ளதாக தரப்பில் கூறியதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.4 தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையம் FMB, வரைபடம், ரசீது தேவையில்லை என்று ஆணை வெளியிட்டுள்ள நிலையில் பிரிவு அலுவலகத்தில் வேண்டுமென்றே அலைகழிக்கும் நோக்கில் தேவையில்லாத ஆவணங்களை கேட்டு அலைகழித்ததாகவும், தான் மின்சார ஒழுங்குமுறை ஆணையம் வெளியிட்டதன் அடிப்படையில் விண்ணப்பம் அளித்து இன்று வரைவில் தனது விண்ணப்பம் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும், எனவே தனது விவசாய மின் இணைப்பு இடமாற்ற ஆணையை விரைந்து வழங்க ஆணையிட வேண்டுமென மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.5 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் சேத்தியாதோப்பு பிரிவு அலுவலகத்திற்கு உட்பட்ட விவசாய மின் இணைப்பு எண் 059-002-653 உள்ள இடமான வளையமாதேசி மேல்பாதி சர்வே எண் 48/15A NLC நிர்வாகத்தால் கையகப்படுத்தப்பட்டதால் மேற்கூறிய விவசாய மின் இணைப்பை இடமாற்றம் செய்ய

கோரி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்ததாகவும், அந்த ஆவணங்களை ஆய்வு செய்ததில் தற்போது மின் இணைப்பு உள்ள இடம் மேல்வளையமாதேவி கிராம புல எண்.51/IA என்றும் மின் இடமாற்றம் கோரும் இடம் கீழ்வளையமாதேவி கிராம புல எண் 231/IE என்றும் தெரிவித்திருந்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 மேலும் கூடுதலான ஆவணங்களை ஆய்வு செய்ததில் மேற்கண்ட மின் இணைப்பு முதன் முதலாக வழங்கப்பட்ட காலத்தில் 03-05-2006-ல் திரு சம்பந்தம் என்பவர் பெயரில் இருந்து அவர் இறந்துவிட்ட காரணத்தால் அவரது மகன் திரு S.பழனிவேல் என்பவருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டிருப்பதும் அந்த ஆணையில் புல எண் 48/15A என்று உள்ளதை அறியப்பட்டதால், இம்மின் இணைப்பு புல எண் 48/15A-ல் தான் வழங்கப்பட்டுள்ளது என்று உறுதி செய்யப்பட்டதாகவும், அங்கு ஆழ்துளை கிணறு பழுதானதால் நுகர்வோர் மின்வாரியத்திடம் எந்த முறையான அனுமதியும் பெறாமல் புல எண் 51/IA-ல் போர் அமைத்து மின் இணைப்பு வழங்கப்பட்ட கம்பத்தில் அல்லாது அருகில் உள்ள வேறு ஒரு மின்கம்பத்தில் தன்னிச்சையாக மின் இணைப்பு செய்து மின் உபயோகம் செய்து வருவது கண்டறியப்பட்டதாகவும், எனவே அவர் பழைய பழுதான போர் இருந்த இடம் சர்வே எண் 48/15 A என்பதற்கு பதில் 51/IA என்று தவறாக விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருந்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 மேலும் தற்போது விவசாய மின் இணைப்பு 02-059-002-653-ஐ இடமாற்றம் செய்ய அளிக்கப்பட்ட விண்ணப்பத்தில் இணைக்கப்பட்டுள்ள பட்டாவில் சர்வே எண்.48/15A-ல் 46ஏர்ஸ் நிலப்பரப்பு தற்போது திரு சம்பந்தம் பெயரிலேயே உள்ளதாகவும், பின்னர் பாகப்பிரிவினை செய்யப்பட்டதாக நுகர்வோர் அளித்த பத்திரத்தில் மேற்கண்ட சர்வே எண் 48/15A-ல் நுகர்வோருக்கு 12.5 ஏர்ஸ் நிலம் மட்டுமே சொந்தம் என்று பதிவாகியுள்ளதாகவும், சர்வே எண்48/15A-ல் நுகர்வோருக்கு உட்பிரிவு செய்யப்பட்டது குறித்து FM (நிலவரைபடம்) நகலில் விபரம் ஏதும் இல்லை என்றும், எனவே மேற்குறிப்பிட்ட விவசாய இணைப்பு எண்.02-059-002-653 தற்போது இந்த சர்வே எண்ணில் எங்கு உள்ளது என்ற விபரம் நகலில் இல்லை, எனினும் இவ்விடம் முழுவதுமாக NLC-யால் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு விட்டபடியால் NLC நில ஆர்ஜிதம் செய்தபின் வழங்கப்பட்ட ஆவணங்களை இணைத்து, தற்போது அளிக்கப்பட்டுள்ள

விண்ணப்பம் மற்றும் அனைத்து ஆவணங்களிலும் கிணறு உள்ள புல எண் 51/1A என்பதை மின்வாரிய ஆவணங்களில் உள்ளவாறு 48/15A என்று திருத்தி ஆவணங்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்து தரும்படி கோரப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.8 தற்போது மின் இணைப்பு இடமாற்றம் செய்ய கோரும் கீழ் வளையமாதேவி கிராமத்தில் நுகர்வோருக்கு சொந்தமான புல எண். 231/1E க்கு அருகில் உள்ள 100KVA/11KV எரும்பூர் 12 என்ற மின்மாற்றியில் ஏற்கனவே அதிக மின்பளு மற்றும் தாழ்வழுத்த மின்பாதையின் கடைகோடி நெறிகட்டுப்பாடு அதிகம் உள்ளதால் இடமாற்றம் கோரப்படும் மின் இணைப்பை மின்மாற்றியில் சேர்க்க இயலாத நிலை உருவானதால், புதியதாக ஒரு 63KVA/11KV மின்மாற்றியை மேம்பாடு திட்டத்தில் அமைத்து அதில் இம் மின்இணைப்பை இணைக்கும் வகையில் மதிப்பீடு ரூ.5,78,645/- செலவில் தயார் செய்யப்பட்டு 25.03.2024 அன்று அனுமதி பெறப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.9 பின்னர் மேற்கண்ட 02-059-002-653 என்ற விவசாய மின் இணைப்புக்கு உண்டான இடமாற்றம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு 22.05.2024 அன்று அனுமதி அளிக்கப்பட்டதாகவும், தாழ்வழுத்த மின் பாதைக்கான நீட்டிப்பு வகையில் DCW அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட இம்மதிப்பீட்டில் நுகர்வோர் செலுத்த வேண்டிய கட்டணம் ரூ.49,470/- ஆகும் என்றும் இதற்குரிய கேட்பு அறிவிக்கை நுகர்வோருக்கு அளிக்கப்பபட்டு இத்தொகையை 28.05.2024 அன்று இணைய வழியாக செலுத்தி விட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.10 மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகையான ரூ49,470-ஐ 28.05.2024 அன்று நுகர்வோர் செலுத்திய பின் நுகர்வோருடன் இணைந்து புதிய போர் கிணறு பிரிவு அலுவலரால் கள ஆய்வு செய்யப்பட்டதாகவும், 12.5 HP மின் மோட்டார் திறனுடன் இடமாற்றம் கோரும் புதிய போர் கிணறு வெறும் 19.5 அடி ஆழத்தில் 4 Inch pipe உடன் மட்டுமே உள்ளதும், உரிய போர் கிணறு இல்லாததும் உறுதிசெய்யப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.11 மேற்கண்ட வாதி பிரதிவாதிகளின் வாதுரை மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் மேல்முறையீட்டாளரின் இடமாற்றம் குறித்த கோரிக்கை தொடர்பாக அறியவருவது என்னவென்றால் மேல்முறையீட்டாளர் தன்னுடைய விவசாய மின் இணைப்பை இடமாற்றம் செய்யும் மனுவை சரியாக பரிசீலனைக்கு எடுத்து கொள்ளாமல் வேண்டுமென்றே காலதாமதம் நடைபெற்றதாக தான் தெரிவித்துள்ளார். ஆனால் எதிர்மனுதாரர் தன்னுடைய வாதுரையில் மேல்முறையீட்டாளர் உரிய ஆவணங்களை உரிய காலத்தில் சமர்ப்பிக்காததால் மேல்முறையீட்டாளரின் தரப்பில் தான் தாமதம் ஏற்பட்டதே தவிர உரிமதாரரின் அலுவலகத்தில் எந்தவித தாமதமும் ஏற்படவில்லை என வாதிட்டார். இதன் அடிப்படையில் மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரரின் ஆவணங்களை ஆய்வு செய்ததில் மேல்முறையீட்டாளர் விவசாய மின் இணைப்பை இடமாற்றம் கோரும் விண்ணபத்தில் அவருடைய ஆழ்துளை குழாய் கிணறு தற்சமயம் இருக்கும் நிலத்தின் சர்வே எண்ணை 51/1A என குறிப்பிட்டு விண்ணப்பித்தது தெரியவருகிறது. ஆனால் அந்த மின் இணைப்பு பெற்ற நேரத்தில் உரிமதாரரின் அலுவலக ஆவணங்களில் 48/15A என இருப்பதனால் உரிய ஆவணங்களை கேட்டது தெரியவருகிறது. மேலும் தற்சமயம் மேல்வளையமாதேவியில் உள்ள 48/15A-இல் இருந்த ஆழ்குழாய் கிணறு பழுதடைந்துள்ளதும், மேல்முறையீட்டாளர் 51/1A-இல் உள்ள ஆழ்குழாய் கிணற்றை பயன்படுத்தி வருவதும் அறிய முடிகிறது. இதில் மின் இணைப்பு 48/15A-லிருந்து 51/1A-க்கு மாற்றம் நிகழ்ந்தது மேல்முறையீட்டாளர் அனுமதி பெற்றதாக தெரியவில்லை.

7.12 இந்நிலையில் மேல்முறையீட்டாளர் சரியான புல எண் குறித்து 12.02.2024-இல் தான் சான்று சமர்ப்பித்ததும், மேலும் தற்சமயம் அவருடைய நிலம் NLC-ஆல் ஆர்ஜிதம் செய்யப்பட்டதற்கான ஆவணங்களுடன் 07.03.2024 அன்று தான் விண்ணப்பித்ததாக அறிய முடிகிறது.

7.13 தற்சமயம் மேல்முறையீட்டாளர் ஆழ்குழாய் கிணறு இருக்கும் இடத்தின் நிலத்தை NLC நிறுவனம் 2005-இல் ஆர்ஜிதம் செய்ய தொடங்கிய நிலையில் அவருடைய பெயரில் பட்டா இல்லை என்பதை மேல்முறையீட்டாளர் ஒப்புக் கொண்டதும் அறிய முடிகிறது. ஆகவே, விவசாய நிலம் மற்றும் ஆழ்குழாய் கிணறு NLC நிறுவனத்தால் ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலையில் 08.10.2021 அன்று உரிய நிவாரணம்

பெறப்பட்டது தெரியவருகிறது. மேல்முறையீட்டாளர் 07.03.2024–இல் பதிவேற்றம் செய்த நிலையில் நிலம் மற்றும் ஆழ்குழாய் கிணறு மேல்முறையீட்டாளரின் வசம் இல்லாததால் உரிமதாரர் உரிய அலுவலக அதிகாரியிடம் (தலைமை பொறியாளர், விழுப்புரம்) அவர்களிடம் அனுமதி பெற்றது தெரியவருகிறது. ஆகவே, மேற்கூறிய நிகழ்வுகளின் மூலம் எதிர்மனுதாரரின் செயலில் எந்தவித தாமதமும் ஏற்பட்டதாக தெரியவில்லை.

7.14 மேலும் 22.05.2024 அன்று DCW அடிப்படையில் மின் இணைப்பு மாற்றுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டு 28.05.2024 அன்று ரூ.49,470/– மேல்முறையீட்டாளர் செலுத்தியது தெரியவருகிறது. அதன் அடிப்படையில் 28.05.2024 அன்று நடந்த கள ஆய்வில் விவசாய மின் இணைப்பு இடமாற்றம் கோரும் கீழ்வளையமாதேவி கிராம புல எண் 231/E ஆய்வு செய்ததில் அந்த நிலத்தில் உரிய கிணறு இல்லாததால் எதிர்மனுதாரர் 29.05.2024–இல் தயார் நிலை தெரிவிக்க மேல்முறையீட்டாளரை அறிவுறுத்தியது தெரியவருகிறது. இந்நிலையில் விவசாய மின் இணைப்பை இடமாற்றம் செய்வதற்கான தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பு விதி 5(6)–ஐ ஆராய விரும்புகிறேன். அவ்விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

"5. Mis*cellaneous charges*

*(6)Service/Line, Structures and equipements shifting charge*

*(1)xxx*

*(2)xxx*

*(3) (1) shifting of an existing service connection, other than an agricultural service connection, involving change in door number or sub-door number or survey field number, shall be considered as a new service connection only.*

*(2) (i) Shifting of an existing agricultural service connection may be permitted within the licensee's jurisdiction. The charges of dismantling in the existing location and erection in the newly proposed location towards the shifting shall be borne by the consumer under Deposit Contribution Works (DCW) basis.*

(ii) Shifting of the existing agricultural service connection will be considered only under the followin*g conditions;*

*(a) Shifting is permissible after one year from the date of effecting the service connection in the existing location or from the date of previous shifting if any.*

*(b) The applicant should have ownership in the well and the service connection at the existing location and the ownership of the well in the proposed location.*

*(c) The well at the existing location owned by the co-onwer(s), should be having separate service connection(s). If the well at the existing location is owned by the co-onwer(s), but not having separate service connection(s), the consent of co-owner(s) shall be obtained and enclosed with the application.*
*(d) The well and service in the original location should be owned by the applicant(s) on the date of application and they should continue to be owned by the applicant(s) till the date of shirting the service to the new location.*
*(iii)xxx*
*(iv)xxx*
*(v)xxx*
*(vi) The request for shifting shall be accompanied with afresh application in form 2 of annexure III appended to the Tamil Nadu Electricity Distribution Code, with relevant documents and registration fee.*
*(vii) Before taking up the work in the newly proposed location, the applicant shall make payment of shifting charges and report readiness of motor-pump set with installation to avail supply in the new location and execute an agreement in Form-6 appended to Tamil Nadu Electricity Distribuion Code, with the distribution licensee for the new location. On compliance, the licensee shall complete the work and give supply and take a test report."*

7.15 மேற்கூறிய விதியை ஆராயும்போது, எந்தவொரு வேளாண் மின் இணைப்பினை இடமாற்றம் செய்யும் உரிமதாரரின் அதிகார எல்லைக்குள் அனுமதிக்கப்படலாம் எனவும் இருந்து வரும் இடத்திலிருந்து பிரித்தெடுப்பதற்கான கட்டணங்கள் மற்றும் இடமாற்றம் செய்தல் பொருட்டு புதியதாக உத்தேசிக்கப்பட்ட இடத்தில் நிறுவுவதற்கான கட்டணங்கள் வைப்பு தொகை பங்களிப்புப்பணி அடிப்படையில் நுகர்வோரால் ஏற்கப்பட வேண்டும் எனவும் தெரிய வருகிறது. மேலும், விண்ணப்பதாரர் தற்போதுள்ள கிணறு மற்றும் கிணற்றில் உள்ள மின்இணைப்பின் உடைமையுரிமை மற்றும் உத்தேசிக்கப்பட்ட இடத்தில் உள்ள கிணற்றின் உடைமையுரிமை உடையவராக இருத்தல் வேண்டும் என தெரிய வருகிறது.

7.16 மேலும் மின்னிணைப்பு இடமாற்றத்திற்கான கோரிக்கை மனுவானது, தமிழ்நாடு மின்சார பகிர்மான விதித்தொகுப்புடன் இணைக்கப்பட்டுள்ள III ஆம் பின்னிணைப்பின் படிவம் 2 லான புதிய விண்ணப்பத்துடனும், தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் பதிவுக்கட்டணத்துடன் சேர்ந்து விண்ணப்பிக்கப்பட வேண்டும் என அறிய முடிகிறது. மேலும் உரிமதாரர் விவசாய மின் இணைப்பை புதிய இடத்தில் மாற்றம் செய்வதற்கான வேலையை தொடங்குவதற்கு முன்பு மேல்முறையீட்டாளர் உரிய இடமாற்றதிற்கான

கட்டணத்தையும் மற்றும் தயார் நிலை Motor Pumpset இருப்பதை உறுதி செய்து படிவம் 16–இன் அடிப்படையில் ஒப்பந்தம் செய்த நிலைக்கு பின்பு உரிமதாரர் அந்த இடமாற்றம் வேலையை நிறைவு செய்த சோதனை அறிக்கை பெற வேண்டும் என்று தெரிகிறது.

7.17 ஆனால் மேல்முறையீட்டாளர் இடமாற்றம் கோரும் இடத்தில் ஆழ்குழாய் கிணறு இல்லை என்று எதிர்மனுதாரரின் களஆய்வில் தெரியவருகிறது. ஆனால் கேட்புரை அன்று மேல்முறையீட்டாளர் தற்சமயம் ஆழ்குழாய் கிணறு இருப்பதாக தெரிவித்தார். இத்தகவலை உரிமதாரருக்கு தெரிவித்த ஆவணங்களை கேட்டபோது வாய்மொழியாக தெரிவித்ததாக கூறினார். எதிர்மனுதாரர் இடமாற்றம் கோரும் கீழ்வளையமாதேவி கிராம புல எண் 231/E –இல் ஆழ்குழாய் கிணறு நிறுவப்பட்டதாக எந்தவிதமான தகவலும் பெறப்படவில்லை என வாதிட்டார். ஆகவே, மேல்முறையீட்டாளர் உரிய ஆவணங்களுடன் எதிர்மனுதாரருக்கு தயார் நிலை தெரிவிக்கும் நிலையில் உரிமதாரர் உரிய விவசாய மின் இணைப்பு இடமாற்றம் செய்ய உத்தரவிடப்படுகிறது.

7.18 மேல்முறையீட்டாளர் விவசாய இணைப்பு எண் 059–002–653 உள்ள நிலம் NLC நிர்வாகத்தால் ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலையில் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டதற்கான உரிய ஆவணங்கள், மற்றும் விண்ணப்பத்தில் சரியான புல எண்களை தெரிவிக்காத நிலையிலும் மேலும் இடமாற்றம் கோரும் இடத்தில் தயார் நிலை தெரிவிக்காத நிலையில் அவருடைய நஷ்டஈடு வழங்குவது தொடர்பான கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது. மேலும் உரிமதாரர் அலுவலர் மீது நடவடிக்கை எடுக்கும் கோரிக்கை சம்பந்தமாக மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார குறைதீர்ப்பாளர் ஒழுங்குமுறை விதி 2004–இன்படி உரிமம்தாரரின் பணியாளர் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் மின்குறைதீர்ப்பாளருக்கு இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

## 8.0 <u>முடிவுரை:</u>

8.1 மேற்கூறிய பத்திகளில் உள்ள தீர்வின் அடிப்படையில் மேல்முறையீட்டாளர் தயார் நிலையை தெரிவிக்கும் ஆவணங்களை சமர்ப்பிக்கும் பட்சத்தில் விவசாய மின் இணைப்பை இடமாற்றம் செய்ய எதிர்மனுதாரருக்கு உத்தரவிடப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 34/2024 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1. திரு.எஸ்.பழனிவேல், – By RPAD
எண்.1/206, திருவள்ளுவர் தெரு,
மேல் வளையமாதேவி அஞ்சல் ,
புவனகிரி வட்டம், கடலூர் மாவட்டம்.

2. செயற்பொறியாளர் / இ& ப/ சிதம்பரம்,
110/33-11கேவி சிதம்பரம் துணை மின்நிலையம்,
ஆண்டிஸ்வரன் கோவில் தெரு அருகில்,
கடலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சிதம்பரம் – 608001.

3. உதவி பொறியாளர் / இ&ப/ கிழக்கு /சேத்தியாதோப்பு
கடலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பெரியார் நகர், மேல்வலயமாதேவி அஞ்சல்,
புவனகிரி தாலுக்கா, சேத்தியாதோப்பு – 608704.

4. மேற்பார்வை பொறியாளர், – By Email
கடலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கேப்பர் மலை, கடலூர் – 607 004.

5. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

6. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By Email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

7. உதவி இயக்குநர் (கணினி) – <u>**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம், திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.

-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 34 / 2024**

திரு.எஸ்.பழனிவேல்,
எண்.1/206, திருவள்ளுவர் தெரு,
மேல் வளையமாதேவி அஞ்சல் ,
புவனகிரி வட்டம், கடலூர் மாவட்டம்.

………மேல்முறையீட்டாளர்
(திரு.எஸ்.பழனிவேல் &
பிரதிநிதி திரு R. சோமசுந்தரம்)

எதிர்

1. செயற்பொறியாளர் / இ& ப/ சிதம்பரம்,
110/33-11கேவி சிதம்பரம் துணை மின்நிலையம்,
ஆண்டிஸ்வரன் கோவில் தெரு அருகில்,
கடலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சிதம்பரம் – 608001.

2. உதவி பொறியாளர் / இ&ப/ கிழக்கு /சேத்தியாதோப்பு
கடலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பெரியார் நகர், மேல்வலயமாதேவி அஞ்சல்,
புவனகிரி தாலுக்கா, சேத்தியாதோப்பு – 608704.

. . . எதிர்மனுதாரர்கள்
(திருமதி R. ஜெயந்தி, செயற்பொறியாளர் / இ& ப/ சிதம்பரம்
திரு R. ரங்கநாதன், உதவி பொறியாளர் / இ&ப/ கிழக்கு /சேத்தியாதோப்பு)

**மனு பெறப்பட்ட நாள்: 07-05-2024**

**கேட்புரை நாள்: 26-06-2024**

**ஆணை நாள்: 10-07-2024**

07.05.2024 அன்று பெறப்பட்ட திரு.எஸ்.பழனிவேல், எண்.1/206, திருவள்ளுவர் தெரு, மேல் வளையமாதேவி அஞ்சல் , புவனகிரி வட்டம், கடலூர் மாவட்டம் அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 34/2024 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட

மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 26.06.2024 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**ஆணை**

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

விவசாய மின் இணைப்பு எண்.02–059–002–653 இடமாற்றம் செய்யுமாறும், தனது ஜீவாதாரம் பாதிக்கப்பட்டதற்கு உண்டான உரிய நஷ்டஈடு வழங்குமாறும் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **வழக்கின் சுருக்கம்:**

2.1 தனது விவசாய மின் இணைப்பு எண்.02–059–002–653 உள்ள இடமான வளையமாதேவி–மேல்பாதி சர்வே எண் 48/15A–இல் உள்ள நிலத்தை NLC நிர்வாகத்தால் கையகப்படுத்தப்பட்டதால் விவசாய இணைப்பை இடமாற்றம் செய்து தரக் கோரி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேல்முறையீட்டாளரின் விண்ணப்பத்தின் அடிப்படையில் விவசாய மின் இணைப்பு எண்653–ஐ இடமாற்றம் செய்ய அனுமதி பெறப்பட்டவுடன் பங்களிப்பு திட்டத்தின் கீழ் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு விண்ணப்பதாரரால் மதிப்பீட்டுக் கட்டணம் செலுத்தும் பட்சத்தில் விவசாய மின் இணைப்பு இடமாற்றம் செய்யப்படும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எதிர்மனுதாரரின் பதில் திருப்தி அளிக்காத காரணத்தால் மேல்முறையீட்டாளர் கடலூர் மின் பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 27.02.2024 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், கடலூர் மின் பகிர்மான வட்டம் 25.03.2024 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில்

அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

**3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>**

3.1 கடலூர் மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 25.03.2024 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*

*கேட்புரை நாளில் மனுதாரரின் வாதம் மற்றும் எதிர் மனுதாரர்கள் எடுத்துரைத்த வாதங்கள், மனுதாரர் அளித்த மனு மற்றும் எதிருரைகள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து பார்க்கும் போது கீழ்கண்டவை இவ்வழக்கிற்கான வினாவாக எழுகிறது.*

*1. மனுதாரர் குறிப்பிடும் விவசாய மின் இணைப்பு எண் 059-002-653 இடமாற்றம் செய்து தர எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிட இயலுமா?*

*2. வேறு பரிகாரங்கள் பெற மனுதாரர் தகுதியானவரா?*

*வழக்கெழு வினா -1*

*மனுதாரர் குறிப்பிடும் விவசாய மின் இணைப்பு எண் 059-002-653 இடமாற்றம் செய்து தர எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிட இயலுமா?*

*எதிர் மனுதாரர்களின் எதிருரையில் கூறியுள்ளவாறு மனுதாரரின் கோரிக்கையான விவசாய மின் இணைப்பு எண் 059-002-653-ஐ இடமாற்றம் செய்வதற்கு உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கும் பட்சத்தில் TNERC Notification dated 05-August-2020, Notification No. TNERC/DC/8-27/dated 16.07.2020- அறிவுறுத்தியுள்ளவாறு பங்களிப்பு திட்டத்தின் கீழ் மனுதாரரால் மதிப்பீட்டு கட்டணம் செலுத்தும்பட்சத்தில் இம்மின்னிணைப்பு இடமாற்றம் செய்ய உடன் நடவடிக்கை எடுக்க இம்மன்றம் உத்தரவிடுகிறது.*

*மேலும் மனுதாரர் மன்றத்திற்கு அளித்த மனுவில் பிரிவு அலுவலக பணியாளர் மீது புகார் தெரிவித்துள்ளார் கேட்புரை நாளிலும் பிரிவு அலுவலக பணியாளர் மீதான தனது குற்றசாட்டை தெரிவித்தார். மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்திற்கான விதி 2(f) ன்படி இப்புகார் மனு மீது மன்றத்தினால் நடவடிக்கை எடுக்க இயலாது என இம்மன்றம் கருதுகிறது.*

***<u>வழக்கெழு வினா-2</u>***

*வேறு பரிகாரங்கள் பெற மனுதாரர் தகுதியானவரா?*

*மேற்கண்ட வழக்கெழு வினா-1 மனுதாரருக்கு எதிராக முடிவு கண்டுள்ள நிலையில் வேறு எந்த பரிகாரமும் மனுதாரருக்கு கிடைக்க கூடியதில்லை என்று இம்மன்றம் முடிவு செய்கிறது. செலவுதொகை எதுவும் இல்லை."*

**4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:**

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 26.06.2024 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு.எஸ்.பழினிவேல் மற்றும் அவருடைய பிரதிநிதி திரு R. சோமசுந்தரம் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.3 எதிர்மனுதாரர்கள் திருமதி R. ஜெயந்தி, செயற்பொறியாளர் / இ& ப/ சிதம்பரம் மற்றும் திரு R. ரங்கநாதன், உதவி பொறியாளர் / இ&ப/ கிழக்கு /சேத்தியாதோப்பு, கடலூர் மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 **<u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:**

5.1 மேல்முறையீட்டாளர் கடலூர் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் தொடுத்துள்ள வழக்கு தொடர்பாக முறையாக விசாரணை செய்யாமல் ஒருதலைபட்சமாக வழங்கியுள்ள தீர்ப்பு ஏற்றுக் கொள்ளும்படியாக இல்லை எனவும், 03.11.2023 அன்று உதவி மின் பொறியாளர் /இகா/ கிழக்கு/ சேத்தியார்தோப்பு அவர்களிடம் தனது விசாரணை மின் இணைப்பு எண் 059-002-653 உள்ள இடம் NLC India Limited ஆல் கையகப்படுத்திய காரணத்தினால் தனக்கு சொந்தமான வேறு நிலம் சர்வே எண் 231/Eல் மாற்றம் செய்ய வேண்டி அளித்த விண்ணப்பத்தின் பேரில் எந்த நடவடிக்கையும் எடுக்கபடவில்லை என்றும் CA அவர்கள் ரூ.10,000/- கையூட்டு கேட்டது குறித்த

தீர்ப்பில் ஏதும் சொல்லாமல் கழக ஊழியர்களை காப்பாற்றும் நோக்கில் செயல்படுவதாகவும், தனது மனு தொடர்பாக கையூட்டு ரூ. 10.000/– கேட்டு CA அவர்கள் பொறியாளர் கையொப்பம் இட்ட தனது மனுவினை விதிமீறி தன்னிடமே 26.12.2023 அன்று திரும்பி கொடுத்து இணைய தளம் மூலம் பதிவு செய்ய கேட்டது விதி மீறல் பற்றியும் காலதாமதம் பற்றியும் ஏதும் நடவடிக்கை இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

5.2 இரண்டுமுறை மேற்பார்வை பொறியாளர் நுகர்வோர் குறைதீர்க்கும் கூட்டம் சிதம்பரத்தில் தான் அளித்த மனுவின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் நுகர்வோர் குறைதீர்க்கும் கூட்டத்தின் மனுக்கு வாரிய செயல் முறையான ஒப்புகை அட்டை கொடுக்கப்படவில்லை எனவும், இத்தகைய மனு மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையை 1 மாதத்திற்குள் தெரிவிக்க வேண்டியது 3 மாதங்கள் கடந்தும் தெரிவிக்கப்படவில்லை எனவும், பிரிவு அலுவலகத்தில் தனது விண்ணப்பத்தை தான் கையூட்டு கொடுக்கவில்லை என்ற காரணத்தினால் திரும்ப அளித்துவிட்டு இரண்டு மாதம் கடந்து இணையதளத்தில் பதிவு செய்யுமாறு கூறியுள்ளதாகவும், இதனால் தேவையில்லாத கால விரயம் மின் கழகத்தால் ஏற்பட்டுள்ளதாகவும், இது குறித்து தீர்ப்பில் ஏதும் குறிப்பிடவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 06.01.2024 அன்ற இணைய தளத்தில் காலம் கடந்து பதிவு செய்ய வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் தனது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது குறித்து ஏதும் தீர்ப்பில் இல்லை எனவும், தான் விண்ணப்பம் செய்த உடன் இடத்தை ஆய்வு செய்து எந்த குறையும் சொல்லாமல் இருந்துவிட்டு மின் நுகர்வோர் குறைதீர்வு மன்றத்தில் வழக்கு தொடுத்தவுடன் ஏதும் ஆராயாமல் நிலம் திரு. சம்பந்தம் பெயரில் உள்ளதாக தரப்பில் கூறியது ஏற்றுக் கொள்ளும்படியாக இல்லை எனவும் வருவாய் ஆவணங்களை அலுவலகத்தில் சரியாக ஆய்வு செய்யவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 தீர்ப்பில் கூறியுள்ள குறைகள் தொடர்பாக தன்னிடம் எழுத்து பூர்வமாகவோ கடிதத்திலோ ஏதும் தெரிவிக்கவில்லை என்றும், இது தொடர்பாக பின்பு தேதியிட்ட பதிவு அஞ்சல் மூலம் தெரிவித்துள்ளதாகவும், விவசாய மின் இணைப்பு கொடுக்கும் அதிகாரம் மின் வாரியத்திற்கு மட்டுமே உள்ளது என்றும், வேறு கம்பத்தில் மாற்ற அதிகாரமும் அவர்களிடமே உள்ள நிலையில் விவசாயிகளுக்கு எப்படி தெரியும் என்றும், வேறு

கம்பத்தில் மின் இணைப்பு மாற்றப்பட்டது என்பது இது குறித்து எந்த தகவலும் தனக்கு தெரியாது எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையம் FMB, வரைபடம், ரசீது தேவையில்லை என்று ஆணை வெளியிட்டுள்ள நிலையில் பிரிவு அலுவலகத்தில் வேண்டுமென்றே அலைகழைக்கும் நோக்கில் தேவையில்லாத ஆவணங்களை கேட்டு அலைகழிப்பது கையூட்டு பெறும் நோக்கம் இல்லை என்று தன்னால் எவ்வாறு ஏற்றுக் கொள்ள இயலும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 தான் மின்சார ஒழுங்குமுறை ஆணையம் வெளியிட்டதன் அடிப்படையில் விண்ணப்பம் அளித்து இன்று வரைவில் தனது விண்ணப்பம் மீது எந்த நடவடிக்கையும் எடுத்ததாக தெரியவில்லை என்றும், எனவே தனது விவசாய மின் இணைப்பு இடமாற்ற ஆணையை விரைந்து வழங்க ஆணையிட வேண்டுமென மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 NLC India Limited நிர்வாகம் தனது விவசாய நிலத்தை ஆர்ஜிதம் செய்த பிறகும் தனக்கு வேறு வேலைகள் தெரியாத நிலையில் தனது குடும்ப ஜீவனத்திற்காக வேறு விவசாய நிலத்தை விலைக்கு வாங்கி விவசாயம் செய்ய முற்படும்போது மின் இணைப்பு கிடைக்காத நிலையில் தனது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே உடனடியாக மின் இணைப்பு இடமாற்றம் வழங்கிட ஆணையிடவும், தனது ஜீவாதாரம் பாதிக்கப்பட்டதற்கு உண்டான உரிய நஷ்டயீடு வழங்குமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் சிதம்பரம் கோட்டம் கிழக்கு சேத்தியாதோப்பு பிரிவுக்கு உரிய விவசாய மின் இணைப்பு எண்02-059-002- 653 என்ற மின் இணைப்பை இடமாற்றம் செய்து தரக்கோரி மின் இணைப்பின் நுகர்வோர் திரு.S.பழனிவேல் S/O சம்பந்தம், மேல் வளையமாதேவி கிராமம் அவர்கள் 03.11.2023 அன்று பிரிவு அலுவலகத்தில் நேரடியாக விண்ணப்பம் அளித்ததாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய 20.07.2020 தேதியிட்டு வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட Supply Code Regulation 5 (6) – இடமாற்றம் கோரும் விவசாய மின் இணைப்பின் நுகர்வோர் தற்போது விவசாய மின் இணைப்பு உள்ள இடம் மற்றும் இடமாற்றம் கோரும் இடம் ஆகிய இரண்டு இடத்திற்கும் தாமே சொந்தக்காரர் என்பதற்கு சார்பான ஆவணங்களை விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க கூறியுள்ளதாகவும், அதன் அடிப்படையில் அவர் சமர்ப்பித்த ஆவணங்களை ஆய்வு செய்ததில் தற்போது மின் இணைப்பு உள்ள இடம் மேல்வளையமாதேவி கிராம புல எண்.51/IA என்றும் மின் இடமாற்றம் கோரும் இடம் கீழ்வளையமாதேவி கிராம புல எண் 231/IE என்றும் தெரிவித்திருந்ததாகவும், அதற்குரிய கிராம நிர்வாக அலுவலர் சான்று மற்றும் நில உடமை ஆவணங்களையும் இணைத்திருந்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 விண்ணப்பத்துடன், உரிய பிரிவு அலுவலரால் விவசாய மின் இணைப்பு தற்போது இயக்கத்தில் உள்ள இடம் ஆய்வு செய்யப்பட்டதில் இவ்விடம் NLC நிறுவனத்தால் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது உறுதிசெய்யப்பட்டதாகவும், எனவே அதற்குரிய ஆவணத்தை அளிக்க கோரப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மேலும் அவர் இணைத்திருந்த VAO சான்றிதழில் மேற்குறிப்பிட்ட புல எண் 51/IA –ல் உள்ள மின் மோட்டாருக்கு மின் இணைப்பு 48/15A என்ற புல எண்ணில் உள்ளது என்று தெரிவித்து 48/15A–ல் பழுதடைந்த போர் இருந்துள்ளது என்று தெரிவித்துள்ளதாகவும், இதனையடுத்து கூடுதலான ஆவணங்களை ஆய்வு செய்ததில் மேற்கண்ட மின் இணைப்பு முதன் முதலாக வழங்கப்பட்ட காலத்தில் 03–05–2006–ல் திரு சம்பந்தம் என்பவர் பெயரில் இருந்து அவர் இறந்துவிட்ட காரணத்தால் அவரது மகன் திரு S.பழனிவேல் என்பவருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டிருப்பதும் அந்த ஆணையில் புல எண் 48/15A என்று உள்ளதை அறியப்பட்டதால், இம்மின் இணைப்பு புல எண் 48/15A– ல் தான் வழங்கப்பட்டுள்ளது என்று உறுதி செய்யப்பட்டதாகவும், அங்கு ஆழ்துளை கிணறு பழுதானதால் நுகர்வோர் மின்வாரியத்திடம் எந்த முறையான அனுமதியும் பெறாமல் புல எண் 51/IA–ல் போர் அமைத்து மின் இணைப்பு வழங்கப்பட்ட கம்பத்தில் அல்லாது அருகில் உள்ள வேறு ஒரு மின்கம்பத்தில் தன்னிச்சையாக மின் இணைப்பு செய்து மின் உபயோகம் செய்து வருவது கண்டறியப்பட்டதாகவும், எனவே அவர் பழைய பழுதான போர் இருந்த இடம் சர்வே எண் 48/15 A என்பதற்கு பதில் 51/IA

என்று தவறாக விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருந்தது உறுதி செய்யப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மேலும் தற்போது விவசாய மின் இணைப்பு 02-059-002-653-ஐ இடமாற்றம் செய்ய அளிக்கப்பட்ட விண்ணப்பத்தில் இணைக்கப்பட்டுள்ள பட்டாவில் சர்வே எண்.48/15A-ல் 46ஏர்ஸ் நிலப்பரப்பு தற்போது திரு சம்பந்தம் பெயரிலேயே உள்ளதாகவும், பின்னர் பாகப்பிரிவினை செய்யப்பட்டதாக நுகர்வோர் அளித்த பத்திரத்தில் மேற்கண்ட சர்வே எண்48/15A-ல் நுகர்வோருக்கு 12.5 ஏர்ஸ் நிலம் மட்டுமே சொந்தம் என்று பதிவாகியுள்ளதாகவும், சர்வே எண்48/15A-ல் நுகர்வோருக்கு உட்பிரிவு செய்யப்பட்டது குறித்து FM (நிலவரைபடம்) நகலில் விபரம் ஏதும் இல்லை என்றும், எனவே மேற்குறிப்பிட்ட விவசாய இணைப்பு எண்.02-059-002-653 தற்போது இந்த சர்வே எண்ணில் எங்கு உள்ளது என்ற விபரம் நகலில் இல்லை, எனினும் இவ்விடம் முழுவதுமாக NLC-யால் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு விட்டபடியால் NLC நில ஆர்ஜிதம் செய்தபின் வழங்கப்பட்ட ஆவணங்களை இணைத்து, தற்போது அளிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மற்றும் அனைத்து ஆவணங்களிலும் கிணறு உள்ள புல எண் 51/1A என்பதை மின்வாரிய ஆவணங்களில் உள்ளவாறு 48/15A என்று திருத்தி இணைய வழியாக விண்ணப்பிக்குமாறு கூறி முன்பு அலுவலகத்தில் அவர் நேரடியாக வெள்ளைத் தாளில் அளித்த விண்ணப்பத்தில் பிரிவு அலுவலர் செய்திருந்த சுருக்கொப்பதை அழித்து பிரிவு அலுவலர் ஒப்புதலுடன் வணிக ஆய்வாளரால் நுகர்வோரிடம் அளிக்கப்பட்டதாகவும், விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்து தரும்படி கோரப்பட்டதே தவிர நுகர்வோரிடம் கையூட்டு ஏதும் கேட்கவில்லை என்று உதவி செயற்பொறியாளர் மூலம் வணிக ஆய்வாளருக்கு கோரப்பட்ட விளக்கத்திற்கு வணிக ஆய்வாளர் பதிலளித்துள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 வணிக ஆய்வாளர் மீது நடவடிக்கை கோரி மாவட்டம் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் நுகர்வோரால் கோரப்பட்டதற்கு, இது மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்திற்கான விதி எண் 2(F)ன்படி இம்மன்றத்தால் நடவடிக்கை எடுக்க இயலாது எனவும் புகார் குறித்து குறிப்பிட்டு தனி மனுவாக அளிக்கும் பட்சத்தில் அலுவலக ரீதியான உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும்,

மேலும் அவ்வாறான தனி மனு நுகர்வோரிடம் இருந்து பெறப்படவில்லை என்றும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 இதனையடுத்து கடந்த 06.01.2024 அன்று நுகர்வோர் மேற்கண்ட விவசாய மின் இணைப்பு இடமாற்றத்திற்காக இணைய வழியாக பதிவு செய்யப்பட்ட 2000205901248 என்ற எண் கொண்ட விண்ணப்பத்தை ஆய்வு செய்ததில் முன்னர் அலுவலகத்தில் நேரடியாக அளித்த விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ளதை போலவே இணைய வழி விண்ணப்பத்திலும் பழைய போர் இருக்கும் இடம் மேல்வளையமாதேவி புல எண்51/IA என்று தவறாக அனைத்து ஆவணங்களையும் பதிவு செய்திருந்தார் என்றும், மேலும் NLC நில ஆர்ஜிதம் செய்த ஆவணம் ஏதும் பதிவேற்றம் செய்யப்படவில்லை என்றும் இது குறித்து பிரிவு அலுவலரால் நுகர்வோரிடம் தெரிவிக்கப்பட்டதில் 12.02.2024 அன்று சரியான எண்48/15A குறிப்பிட்டு சான்றுகளை அலுவலகத்தில் சமர்ப்பித்ததாகவும். NLC –ன் நில ஆர்ஜிதம் சம்பந்தப்பட்ட ஆவணத்தை பிரிவு அலுவலகத்தில் 02–03–2024 அன்று அளித்தார் தற்போது உள்ள சரியான ஆவணங்களைக் கொண்டு 07–03–2024 அன்று இணைய வழியாக 20002059032460 என்ற எண்ணாக விண்ணப்பித்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 தற்போது மின் இணைப்பு உள்ள இடத்திற்கான பட்டா தன் பெயரில் மாற்ற இயலாததன் காரணம், அந்த இடம் NLC–யால் நில ஆர்ஜிதம் 2005 காலத்திலேயே தொடங்கப்பட்டதால் பட்டா மாற்றம் செய்ய இயலவில்லை என்று 20.03.2024 ல் நுகர்வோர் விளக்க கடிதம் அளித்ததாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.9 தற்போது மின் இணைப்பு இடமாற்றம் செய்ய கோரும் கீழ் வளையமாதேவி கிராமத்தில் நுகர்வோருக்கு சொந்தமான புல எண். 231/1E க்கு அருகில் உள்ள 100KVA/11KV எரும்பூர் 12 என்ற மின்மாற்றியில் ஏற்கனவே அதிக மின்பளு மற்றும் தாழ்வழுத்த மின்பாதையின் கடைகோடி நெறிகட்டுப்பாடு அதிகம் உள்ளதால் இடமாற்றம் கோரப்படும் மின் இணைப்பை மின்மாற்றியில் சேர்க்க இயலாத நிலை உருவானதால், புதியதாக ஒரு 63KVA/11KV மின்மாற்றியை மேம்பாடு திட்டத்தில் அமைத்து அதில் இம் மின்இணைப்பை இணைக்கும் வகையில் மதிப்பீடு ரூ.5,78,645/– செலவில் தயார்

செய்யப்பட்டு 25.03.2024 அன்று அனுமதி பெறப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.10 இந்த புதிய மின்மாற்றியில் மின் இணைப்பை இணைக்கும் வகையில் விவசாய மின் இணைப்பு இடமாற்ற கருத்துரு 27.03.2024 அன்று சமர்ப்பிக்கப்பட்டு, NLC என்ற பொதுத்துறை நிறுவனத்தால் நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட இடம் என்பதால் 30.04.2024 அன்று மேற்பார்வை பொறியாளர் / கடலூர் அவர்களால் தலைமை பொறியாளர் விழுப்புரம் மண்டலம் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு, 16.05.2024 அன்று தலைமை பொறியாளர்/ விழுப்புரம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.11 பின்னர் மேற்கண்ட 02-059-002-653 என்ற விவசாய மின் இணைப்புக்கு உண்டான இடமாற்றம் மதிப்பீடு மேற்கண்ட அனுமதி பெறப்பட்ட கருத்துரு அடிப்படையில் தயார் செய்யப்பட்டு 22.05.2024 அன்று அனுமதி அளிக்கப்பட்டதாகவும், தாழ்வழுத்த மின் பாதைக்கான நீட்டிப்பு வகையில் DCW அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட இம்மதிப்பீட்டில் நுகர்வோர் செலுத்த வேண்டிய கட்டணம் ரூ.49,470/- ஆகும் என்றும் இதற்குரிய கேட்பு அறிவிக்கை நுகர்வோருக்கு அளிக்கப்பபட்டு இத்தகைய 28.05.2024 அன்று இணைய வழியாக செலுத்தி விட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.12 மேற்கண்ட அனைத்து நிலைகளிலும் தமிழ்நாடு மின்வாரிய விதிகளுக்கு உட்பட்டு சரியாகவும் துரிதமாகவும் பணி செய்யப்பட்டுள்ளதாகவும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய 20.07.2020 தேதியிட்டு வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட Supply Code Regulation 5 (6) விதியில் "Shifting of an existing service connection, other than an agricultural service connection, involving change in door number or sub door number or SF number, shall be considered as a new connection only" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே புதிய விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்ப நடைமுறைகளும் பழைய விவசாய மின் இணைப்பு இடமாற்றம் கோரும் விண்ணப்ப நடைமுறைகளும் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் நிலையில் அளிக்கப்பட வேண்டிய ஆவணங்களும் மாறுபடும் என்றும், இடமாற்றம் கோரும் நிலையில் ஆவணங்களும், புதிய குழாய்

கிணறும் சரியாக உள்ள நிலையில் இடம் மாற்றம் உடனே செய்யப்படும் எனவே பழைய இடம் மற்றும் புதிய இடம் குறித்து தற்போதைய நில உரிமை ஆவணங்களும் போர் அமைந்துள்ள இடம் குறித்து சரியாக கனித்து அவ்விடத்தில் மின்கம்பம் அமைத்து இணைப்பை வழங்க FM நகல் மற்றும் VAO சான்று தேவை என்று தெரிவித்துக் கொள்ளப்படுவதாகவும், அதன் அடிப்படையில் ஆவணங்கள் கோரப்பட்டதே தவிர நுகர்வோரை அலைக்கழிக்கும் எண்ணத்தில் அல்ல எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.13 மின் குறை தீர்ப்பாயத்தில் நுகர்வோர் தெரிவித்துள்ளது போல் எந்த நடவடிக்கையும் விண்ணபத்தின் மீது எடுக்கப்படவில்லை என்பது தவறான ஒன்றாகும் எனவும், மேற்கண்ட அனைத்து நடவடிக்கைகளையும் பிரிவு அலுவலரால் நுகர்வோருக்கு அவ்வப்போது தெரிவிக்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.14 மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகையான ரூ49,470–ஐ 28.05.2024 அன்று நுகர்வோர் செலுத்திய பின் நுகர்வோருடன் இணைந்து புதிய போர் கிணறு பிரிவு அலுவலரால் கள ஆய்வு செய்யப்பட்டதாகவும், 12.5 HP மின் மோட்டார் திறனுடன் இடமாற்றம் கோரும் புதிய போர் கிணறு வெறும் 19.5 அடி ஆழத்தில் 4 Inch pipe உடன் மட்டுமே உள்ளதும், உரிய போர் கிணறு இல்லாததும் உறுதிசெய்யப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.15 இதனையடுத்து TNERC Amendment to Tamilnadu Electricity Supply code Notification no. TNERC/SC/7.43 dated 16.07.2020 / 20.07.2020 – ன் படி Supply code regulation 5(6) for clause 3(vii)–ல் தெரிவித்துள்ளபடி விண்ணப்பதாரர் இடமாற்றம் மதிப்பீட்டு கட்டணம் செலுத்திய உடன் புதிய இடத்தில் Motor pumpset நிறுவி, TNERC Distribution code– ல் தெரிவித்துள்ள Form 6–ன் படி ஒப்பந்த பத்திரம் அளித்து, மின் இணைப்பு பெற்றுக் கொள்ள தயார் நிலையை தெரிவிக்க பிரிவு அலுவலகம் மூலம் நுகர்வோருக்கு 29.05.2024 அன்று அறிவிக்கை அளிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.16 அவ்வாறு அவர் தயார் நிலையை தெரிவித்தபின் மேற்கண்ட மின் பாதை நீட்டிப்பு அனுமதியின் படி பணி முடிக்கப்பட்டு மின்சாரம் வழங்கப்படும் எனவும், மேலும் தமிழ்நாடு மின் குறைதீர்க்கும் மன்றத்தின் ஆணைப்படி திரு. பழனிவேல் அவர்களின்

மேல்முறையீட்டு மனு தொடர்பாக இசைவிணக்கம் காணும் பொருட்டு செயற்பொறியாளர்/இயக்குதலும் பராமரித்தலும் / சிதம்பரம் அலுவலகத்திற்கு 28.05.2024 (செவ்வாய்க் கிழமை) அன்று காலை 11.00 மணிக்கு நேரில் வரும்படி திரு.பழனிவேல் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.17 அதை தொடர்ந்து திரு.பழனிமேல் அவரது மகன் மற்றும் திரு.சோமசுந்தரம் ஆகியோர் செயற்பொறியாளர்/ இயக்குதலும் பராமரித்தலும் / சிதம்பரம் அலுவலகத்திற்கு 28.05.2024 (செவ்வாய்க் கிழமை) அன்று 11,00 மணிக்கு நேரில் வந்தபோது பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாகவும், அப்போது திரு.பழனிவேல் அவர்களின் விவசாய மின்இணைப்பை இடம் மாற்றம் செய்வதற்கான விண்ணப்பம் பெறப்பட்டது முதல் தற்போது வரை வாரியத்தால் அவரது விண்ணப்பத்தின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி தெரிவிக்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.18 எனினும் அவர் கிழக்கு சேத்தியாதோப்பு பிரிவில் பணிபுரியும் வணிக ஆய்வாளர் அவர்கள் AE அவர்கள் கையெழுத்திட்ட விண்ணப்பத்தை கையூட்டு பெறும் நோக்கில் கையெழுத்தை அடித்துவிட்டு விண்ணப்பத்தை திரும்ப அளித்து விட்டதாக வாதிட்டதாகவும், மேற்படி விண்ணப்பத்தில் உள்ள குறைபாடுகளை சரிசெய்து தருவதற்காகத்தான் விண்ணப்பத்தை திரும்ப அளிக்கப்பட்டது என எடுத்துக் கூறியும் அதனை ஏற்க மறுத்து அலுவலகத்திலிருந்து வெளியே சென்று விட்டதாகவும், இதனால் 28.05.2024 (செவ்வாய்க்கிழமை) நடைபெற்ற பேச்சு வார்த்தையில் இசைவிணக்கம் ஏற்படவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.19 திரு.பழனிவேல் அவர்கள் தயார் நிலை தெரிவித்த பின் மின்பாதை நீட்டிப்பு பணிகள் முடிக்கப்பெற்று விவசாய மின்இணைப்பு எண்.02-059-002-653 இடம் மாற்றம் செய்யப்படும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் தனது விவசாய மின் இணைப்பு எண்.02-059-002-653 உள்ள இடமான வளையமாதேவி-மேல்பாதி சர்வே எண் 48/15A-இல் உள்ள நிலத்தை NLC நிர்வாகத்தால் கையகப்படுத்தப்பட்டதால் அந்த விவசாய மின் இணைப்பை தனக்கு சொந்தமான வேறு நிலம் உள்ள சர்வே எண் 231/1E-க்கு இடமாற்றம் செய்து தரக் கோரி சேத்தியாதோப்பு பிரிவு அலுவலகத்தில் விண்ணப்பித்ததாகவும், ஆனால் அந்த விண்ணப்பத்தின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் திருப்பி அளிக்கப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 இரண்டு மாதங்கள் கடந்து இணையதளத்தில் பதிவு செய்யுமாறு திருப்பி அளிக்கப்பட்டதன் பேரில் 06.01.2024 அன்று இணையதளத்தில் காலம் கடந்த பதிவு செய்ய வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டதாகவும், அதனால் தனது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டதாகவும், தான் விண்ணப்பம் செய்தவுடன் இடத்தை ஆய்வு செய்து எந்த குறையும் சொல்லாமல் இருந்துவிட்டு மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் வழக்கு தொடுத்தவுடன் ஏதும் ஆராயாமல் நிலம் திரு. சம்பந்தம் பெயரில் உள்ளதாக தரப்பில் கூறியதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.4 தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையம் FMB, வரைபடம், ரசீது தேவையில்லை என்று ஆணை வெளியிட்டுள்ள நிலையில் பிரிவு அலுவலகத்தில் வேண்டுமென்றே அலைகழிக்கும் நோக்கில் தேவையில்லாத ஆவணங்களை கேட்டு அலைகழித்ததாகவும், தான் மின்சார ஒழுங்குமுறை ஆணையம் வெளியிட்டதன் அடிப்படையில் விண்ணப்பம் அளித்து இன்று வரைவில் தனது விண்ணப்பம் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும், எனவே தனது விவசாய மின் இணைப்பு இடமாற்ற ஆணையை விரைந்து வழங்க ஆணையிட வேண்டுமென மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.5 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் சேத்தியாதோப்பு பிரிவு அலுவலகத்திற்கு உட்பட்ட விவசாய மின் இணைப்பு எண் 059-002-653 உள்ள இடமான வளையமாதேசி மேல்பாதி சர்வே எண் 48/15A NLC நிர்வாகத்தால் கையகப்படுத்தப்பட்டதால் மேற்கூறிய விவசாய மின் இணைப்பை இடமாற்றம் செய்ய

கோரி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்ததாகவும், அந்த ஆவணங்களை ஆய்வு செய்ததில் தற்போது மின் இணைப்பு உள்ள இடம் மேல்வளையமாதேவி கிராம புல எண்.51/IA என்றும் மின் இடமாற்றம் கோரும் இடம் கீழ்வளையமாதேவி கிராம புல எண் 231/IE என்றும் தெரிவித்திருந்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 மேலும் கூடுதலான ஆவணங்களை ஆய்வு செய்ததில் மேற்கண்ட மின் இணைப்பு முதன் முதலாக வழங்கப்பட்ட காலத்தில் 03-05-2006-ல் திரு சம்பந்தம் என்பவர் பெயரில் இருந்து அவர் இறந்துவிட்ட காரணத்தால் அவரது மகன் திரு S.பழனிவேல் என்பவருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டிருப்பதும் அந்த ஆணையில் புல எண் 48/15A என்று உள்ளதை அறியப்பட்டதால், இம்மின் இணைப்பு புல எண் 48/15A-ல் தான் வழங்கப்பட்டுள்ளது என்று உறுதி செய்யப்பட்டதாகவும், அங்கு ஆழ்துளை கிணறு பழுதானதால் நுகர்வோர் மின்வாரியத்திடம் எந்த முறையான அனுமதியும் பெறாமல் புல எண் 51/IA-ல் போர் அமைத்து மின் இணைப்பு வழங்கப்பட்ட கம்பத்தில் அல்லாது அருகில் உள்ள வேறு ஒரு மின்கம்பத்தில் தன்னிச்சையாக மின் இணைப்பு செய்து மின் உபயோகம் செய்து வருவது கண்டறியப்பட்டதாகவும், எனவே அவர் பழைய பழுதான போர் இருந்த இடம் சர்வே எண் 48/15 A என்பதற்கு பதில் 51/IA என்று தவறாக விண்ணபத்தில் குறிப்பிட்டிருந்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 மேலும் தற்போது விவசாய மின் இணைப்பு 02-059-002-653-ஐ இடமாற்றம் செய்ய அளிக்கப்பட்ட விண்ணபத்தில் இணைக்கப்பட்டுள்ள பட்டாவில் சர்வே எண்.48/15A-ல் 46ஏர்ஸ் நிலப்பரப்பு தற்போது திரு சம்பந்தம் பெயரிலேயே உள்ளதாகவும், பின்னர் பாகப்பிரிவினை செய்யப்பட்டதாக நுகர்வோர் அளித்த பத்திரத்தில் மேற்கண்ட சர்வே எண் 48/15A-ல் நுகர்வோருக்கு 12.5 ஏர்ஸ் நிலம் மட்டுமே சொந்தம் என்று பதிவாகியுள்ளதாகவும், சர்வே எண்48/15A-ல் நுகர்வோருக்கு உட்பிரிவு செய்யப்பட்டது குறித்து FM (நிலவரைபடம்) நகலில் விபரம் ஏதும் இல்லை என்றும், எனவே மேற்குறிப்பிட்ட விவசாய இணைப்பு எண்.02-059-002-653 தற்போது இந்த சர்வே எண்ணில் எங்கு உள்ளது என்ற விபரம் நகலில் இல்லை, எனினும் இவ்விடம் முழுவதுமாக NLC-யால் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு விட்டபடியால் NLC நில ஆர்ஜிதம் செய்தபின் வழங்கப்பட்ட ஆவணங்களை இணைத்து, தற்போது அளிக்கப்பட்டுள்ள

விண்ணப்பம் மற்றும் அனைத்து ஆவணங்களிலும் கிணறு உள்ள புல எண் 51/1A என்பதை மின்வாரிய ஆவணங்களில் உள்ளவாறு 48/15A என்று திருத்தி ஆவணங்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்து தரும்படி கோரப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.8 தற்போது மின் இணைப்பு இடமாற்றம் செய்ய கோரும் கீழ் வளையமாதேவி கிராமத்தில் நுகர்வோருக்கு சொந்தமான புல எண். 231/1E க்கு அருகில் உள்ள 100KVA/11KV எரும்பூர் 12 என்ற மின்மாற்றியில் ஏற்கனவே அதிக மின்பளு மற்றும் தாழ்வழுத்த மின்பாதையின் கடைகோடி நெறிகட்டுப்பாடு அதிகம் உள்ளதால் இடமாற்றம் கோரப்படும் மின் இணைப்பை மின்மாற்றியில் சேர்க்க இயலாத நிலை உருவானதால், புதியதாக ஒரு 63KVA/11KV மின்மாற்றியை மேம்பாடு திட்டத்தில் அமைத்து அதில் இம் மின்இணைப்பை இணைக்கும் வகையில் மதிப்பீடு ரூ.5,78,645/- செலவில் தயார் செய்யப்பட்டு 25.03.2024 அன்று அனுமதி பெறப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.9 பின்னர் மேற்கண்ட 02-059-002-653 என்ற விவசாய மின் இணைப்புக்கு உண்டான இடமாற்றம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு 22.05.2024 அன்று அனுமதி அளிக்கப்பட்டதாகவும், தாழ்வழுத்த மின் பாதைக்கான நீட்டிப்பு வகையில் DCW அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட இம்மதிப்பீட்டில் நுகர்வோர் செலுத்த வேண்டிய கட்டணம் ரூ.49,470/- ஆகும் என்றும் இதற்குரிய கேட்பு அறிவிக்கை நுகர்வோருக்கு அளிக்கப்பபட்டு இத்தொகையை 28.05.2024 அன்று இணைய வழியாக செலுத்தி விட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.10 மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகையான ரூ49,470-ஐ 28.05.2024 அன்று நுகர்வோர் செலுத்திய பின் நுகர்வோருடன் இணைந்து புதிய போர் கிணறு பிரிவு அலுவலரால் கள ஆய்வு செய்யப்பட்டதாகவும், 12.5 HP மின் மோட்டார் திறனுடன் இடமாற்றம் கோரும் புதிய போர் கிணறு வெறும் 19.5 அடி ஆழத்தில் 4 Inch pipe உடன் மட்டுமே உள்ளதும், உரிய போர் கிணறு இல்லாததும் உறுதிசெய்யப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.11 மேற்கண்ட வாதி பிரதிவாதிகளின் வாதுரை மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் மேல்முறையீட்டாளரின் இடமாற்றம் குறித்த கோரிக்கை தொடர்பாக அறியவருவது என்னவென்றால் மேல்முறையீட்டாளர் தன்னுடைய விவசாய மின் இணைப்பை இடமாற்றம் செய்யும் மனுவை சரியாக பரிசீலனைக்கு எடுத்து கொள்ளாமல் வேண்டுமென்றே காலதாமதம் நடைபெற்றதாக தான் தெரிவித்துள்ளார். ஆனால் எதிர்மனுதாரர் தன்னுடைய வாதுரையில் மேல்முறையீட்டாளர் உரிய ஆவணங்களை உரிய காலத்தில் சமர்ப்பிக்காததால் மேல்முறையீட்டாளரின் தரப்பில் தான் தாமதம் ஏற்பட்டதே தவிர உரிமதாரரின் அலுவலகத்தில் எந்தவித தாமதமும் ஏற்படவில்லை என வாதிட்டார். இதன் அடிப்படையில் மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரரின் ஆவணங்களை ஆய்வு செய்ததில் மேல்முறையீட்டாளர் விவசாய மின் இணைப்பை இடமாற்றம் கோரும் விண்ணப்பத்தில் அவருடைய ஆழ்துளை குழாய் கிணறு தற்சமயம் இருக்கும் நிலத்தின் சர்வே எண்ணை 51/1A என குறிப்பிட்டு விண்ணப்பித்தது தெரியவருகிறது. ஆனால் அந்த மின் இணைப்பு பெற்ற நேரத்தில் உரிமதாரரின் அலுவலக ஆவணங்களில் 48/15A என இருப்பதனால் உரிய ஆவணங்களை கேட்டது தெரியவருகிறது. மேலும் தற்சமயம் மேல்வளையமாதேவியில் உள்ள 48/15A–இல் இருந்த ஆழ்குழாய் கிணறு பழுதடைந்துள்ளதும், மேல்முறையீட்டாளர் 51/1A–இல் உள்ள ஆழ்குழாய் கிணற்றை பயன்படுத்தி வருவதும் அறிய முடிகிறது. இதில் மின் இணைப்பு 48/15A–லிருந்து 51/1A–க்கு மாற்றம் நிகழ்ந்தது மேல்முறையீட்டாளர் அனுமதி பெற்றதாக தெரியவில்லை.

7.12 இந்நிலையில் மேல்முறையீட்டாளர் சரியான புல எண் குறித்து 12.02.2024–இல் தான் சான்று சமர்ப்பித்ததும், மேலும் தற்சமயம் அவருடைய நிலம் NLC–ஆல் ஆர்ஜிதம் செய்யப்பட்டதற்கான ஆவணங்களுடன் 07.03.2024 அன்று தான் விண்ணப்பித்ததாக அறிய முடிகிறது.

7.13 தற்சமயம் மேல்முறையீட்டாளர் ஆழ்குழாய் கிணறு இருக்கும் இடத்தின் நிலத்தை NLC நிறுவனம் 2005–இல் ஆர்ஜிதம் செய்ய தொடங்கிய நிலையில் அவருடைய பெயரில் பட்டா இல்லை என்பதை மேல்முறையீட்டாளர் ஒப்புக் கொண்டதும் அறிய முடிகிறது. ஆகவே, விவசாய நிலம் மற்றும் ஆழ்குழாய் கிணறு NLC நிறுவனத்தால் ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலையில் 08.10.2021 அன்று உரிய நிவாரணம்

பெறப்பட்டது தெரியவருகிறது. மேல்முறையீட்டாளர் 07.03.2024–இல் பதிவேற்றம் செய்த நிலையில் நிலம் மற்றும் ஆழ்குழாய் கிணறு மேல்முறையீட்டாளரின் வசம் இல்லாததால் உரிமதாரர் உரிய அலுவலக அதிகாரியிடம் (தலைமை பொறியாளர், விழுப்புரம்) அவர்களிடம் அனுமதி பெற்றது தெரியவருகிறது. ஆகவே, மேற்கூறிய நிகழ்வுகளின் மூலம் எதிர்மனுதாரரின் செயலில் எந்தவித தாமதமும் ஏற்பட்டதாக தெரியவில்லை.

7.14 மேலும் 22.05.2024 அன்று DCW அடிப்படையில் மின் இணைப்பு மாற்றுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டு 28.05.2024 அன்று ரூ.49,470/– மேல்முறையீட்டாளர் செலுத்தியது தெரியவருகிறது. அதன் அடிப்படையில் 28.05.2024 அன்று நடந்த கள ஆய்வில் விவசாய மின் இணைப்பு இடமாற்றம் கோரும் கீழ்வளையமாதேவி கிராம புல எண் 231/E ஆய்வு செய்ததில் அந்த நிலத்தில் உரிய கிணறு இல்லாததால் எதிர்மனுதாரர் 29.05.2024–இல் தயார் நிலை தெரிவிக்க மேல்முறையீட்டாளரை அறிவுறுத்தியது தெரியவருகிறது. இந்நிலையில் விவசாய மின் இணைப்பை இடமாற்றம் செய்வதற்கான தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பு விதி 5(6)–ஐ ஆராய விரும்புகிறேன். அவ்விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

"5. Mis*cellaneous charges*

*(6)Service/Line, Structures and equipements shifting charge*

*(1)xxx*

*(2)xxx*

*(3) (1) shifting of an existing service connection, other than an agricultural service connection, involving change in door number or sub-door number or survey field number, shall be considered as a new service connection only.*

*(2) (i) Shifting of an existing agricultural service connection may be permitted within the licensee's jurisdiction. The charges of dismantling in the existing location and erection in the newly proposed location towards the shifting shall be borne by the consumer under Deposit Contribution Works (DCW) basis.*

(ii) Shifting of the existing agricultural service connection will be considered only under the followin*g conditions;*

*(a) Shifting is permissible after one year from the date of effecting the service connection in the existing location or from the date of previous shifting if any.*

*(b) The applicant should have ownership in the well and the service connection at the existing location and the ownership of the well in the proposed location.*

*(c) The well at the existing location owned by the co-onwer(s), should be having separate service connection(s). If the well at the existing location is owned by the co-onwer(s), but not having separate service connection(s), the consent of co-owner(s) shall be obtained and enclosed with the application.*
*(d) The well and service in the original location should be owned by the applicant(s) on the date of application and they should continue to be owned by the applicant(s) till the date of shirting the service to the new location.*
*(iii)xxx*
*(iv)xxx*
*(v)xxx*
*(vi) The request for shifting shall be accompanied with afresh application in form 2 of annexure III appended to the Tamil Nadu Electricity Distribution Code, with relevant documents and registration fee.*
*(vii) Before taking up the work in the newly proposed location, the applicant shall make payment of shifting charges and report readiness of motor-pump set with installation to avail supply in the new location and execute an agreement in Form-6 appended to Tamil Nadu Electricity Distribuion Code, with the distribution licensee for the new location. On compliance, the licensee shall complete the work and give supply and take a test report."*

7.15 மேற்கூறிய விதியை ஆராயும்போது, எந்தவொரு வேளாண் மின் இணைப்பினை இடமாற்றம் செய்யும் உரிமதாரரின் அதிகார எல்லைக்குள் அனுமதிக்கப்படலாம் எனவும் இருந்து வரும் இடத்திலிருந்து பிரித்தெடுப்பதற்கான கட்டணங்கள் மற்றும் இடமாற்றம் செய்தல் பொருட்டு புதியதாக உத்தேசிக்கப்பட்ட இடத்தில் நிறுவுவதற்கான கட்டணங்கள் வைப்பு தொகை பங்களிப்புப்பணி அடிப்படையில் நுகர்வோரால் ஏற்கப்பட வேண்டும் எனவும் தெரிய வருகிறது. மேலும், விண்ணப்பதாரர் தற்போதுள்ள கிணறு மற்றும் கிணற்றில் உள்ள மின்இணைப்பின் உடைமையுரிமை மற்றும் உத்தேசிக்கப்பட்ட இடத்தில் உள்ள கிணற்றின் உடைமையுரிமை உடையவராக இருத்தல் வேண்டும் என தெரிய வருகிறது.

7.16 மேலும் மின்னிணைப்பு இடமாற்றத்திற்கான கோரிக்கை மனுவானது, தமிழ்நாடு மின்சார பகிர்மான விதித்தொகுப்புடன் இணைக்கப்பட்டுள்ள III ஆம் பின்னிணைப்பின் படிவம் 2 லான புதிய விண்ணப்பத்துடனும், தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் பதிவுக்கட்டணத்துடன் சேர்ந்து விண்ணப்பிக்கப்பட வேண்டும் என அறிய முடிகிறது. மேலும் உரிமதாரர் விவசாய மின் இணைப்பை புதிய இடத்தில் மாற்றம் செய்வதற்கான வேலையை தொடங்குவதற்கு முன்பு மேல்முறையீட்டாளர் உரிய இடமாற்றதிற்கான

கட்டணத்தையும் மற்றும் தயார் நிலை Motor Pumpset இருப்பதை உறுதி செய்து படிவம் 16–இன் அடிப்படையில் ஒப்பந்தம் செய்த நிலைக்கு பின்பு உரிமதாரர் அந்த இடமாற்றம் வேலையை நிறைவு செய்த சோதனை அறிக்கை பெற வேண்டும் என்று தெரிகிறது.

7.17 ஆனால் மேல்முறையீட்டாளர் இடமாற்றம் கோரும் இடத்தில் ஆழ்குழாய் கிணறு இல்லை என்று எதிர்மனுதாரரின் களஆய்வில் தெரியவருகிறது. ஆனால் கேட்புரை அன்று மேல்முறையீட்டாளர் தற்சமயம் ஆழ்குழாய் கிணறு இருப்பதாக தெரிவித்தார். இத்தகவலை உரிமதாரருக்கு தெரிவித்த ஆவணங்களை கேட்டபோது வாய்மொழியாக தெரிவித்ததாக கூறினார். எதிர்மனுதாரர் இடமாற்றம் கோரும் கீழ்வளையமாதேவி கிராம புல எண் 231/E –இல் ஆழ்குழாய் கிணறு நிறுவப்பட்டதாக எந்தவிதமான தகவலும் பெறப்படவில்லை என வாதிட்டார். ஆகவே, மேல்முறையீட்டாளர் உரிய ஆவணங்களுடன் எதிர்மனுதாரருக்கு தயார் நிலை தெரிவிக்கும் நிலையில் உரிமதாரர் உரிய விவசாய மின் இணைப்பு இடமாற்றம் செய்ய உத்தரவிடப்படுகிறது.

7.18 மேல்முறையீட்டாளர் விவசாய இணைப்பு எண் 059–002–653 உள்ள நிலம் NLC நிர்வாகத்தால் ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலையில் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டதற்கான உரிய ஆவணங்கள், மற்றும் விண்ணப்பத்தில் சரியான புல எண்களை தெரிவிக்காத நிலையிலும் மேலும் இடமாற்றம் கோரும் இடத்தில் தயார் நிலை தெரிவிக்காத நிலையில் அவருடைய நஷ்டஈடு வழங்குவது தொடர்பான கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது. மேலும் உரிமதாரர் அலுவலர் மீது நடவடிக்கை எடுக்கும் கோரிக்கை சம்பந்தமாக மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார குறைதீர்ப்பாளர் ஒழுங்குமுறை விதி 2004–இன்படி உரிமம்தாரரின் பணியாளர் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் மின்குறைதீர்ப்பாளருக்கு இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

**8.0 <u>முடிவுரை:</u>**

8.1 மேற்கூறிய பத்திகளில் உள்ள தீர்வின் அடிப்படையில் மேல்முறையீட்டாளர் தயார் நிலையை தெரிவிக்கும் ஆவணங்களை சமர்ப்பிக்கும் பட்சத்தில் விவசாய மின் இணைப்பை இடமாற்றம் செய்ய எதிர்மனுதாரருக்கு உத்தரவிடப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 34/2024 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1. திரு.எஸ்.பழனிவேல், – By RPAD
எண்.1/206, திருவள்ளுவர் தெரு,
மேல் வளையமாதேவி அஞ்சல் ,
புவனகிரி வட்டம், கடலூர் மாவட்டம்.

2. செயற்பொறியாளர் / இ& ப/ சிதம்பரம்,
110/33-11கேவி சிதம்பரம் துணை மின்நிலையம்,
ஆண்டிஸ்வரன் கோவில் தெரு அருகில்,
கடலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சிதம்பரம் – 608001.

3. உதவி பொறியாளர் / இ&ப/ கிழக்கு /சேத்தியாதோப்பு
கடலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பெரியார் நகர், மேல்வலயமாதேவி அஞ்சல்,
புவனகிரி தாலுக்கா, சேத்தியாதோப்பு – 608704.

4. மேற்பார்வை பொறியாளர், – By Email
கடலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கேப்பர் மலை, கடலூர் – 607 004.

5. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

6. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By Email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

7. உதவி இயக்குநர் (கணினி) – <u>**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம், திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.